விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 02 வியாழக்கிழமை (14.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# வாக்குறுதியை நிறைவேற்ற இலங்கை தவறிவிட்டது!

## நவநீதம்பிள்ளையின் அறிக்கை குற்றச்சாட்டு



(ஜெனிவா), இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரணை செய்யப்படும் என வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்துள்ள 18 பக்க அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக ஏஎவ்பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறீதரன் மீண்டும் 4-ம் மாடிக்கு அழைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மீண்டும் கொழும்பு நான்காம் மாடிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 18-ம் திகதி குறித்த விசாரணைக்கு சமுகமளிக்குமாறு நேற்று அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது அலுவலகத்தில் அரசு மீட்டதாக தெரிவித்த வெடிபொருள் மற்றும் இறுவட்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் தூதுவர் தமிழில் உரை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நொபுஹிரோ ஹோபோ யாழில் தமிழில் உரையாற்றியதோடு ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் சமாதானத்திற்கும் தேசிய நல்லிணக்கத்திற்கும் அபிவிருத்தி நோக்கிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மத்திய (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மக்களின் தேவைகளை நான் ஒருபோதும் மறக்கவில்லை

### வைத்தியசாலை கட்டிட திறப்பு விழாவில் ஜனாதிபதி உரை

(யாழ்ப்பாணம்)

எல்லா மக்களும் சமவுரிமையுடனும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டும். எதிர்க்கட்சி என்ன சொன்னாலும் உங்கள் தேவைகளை நான் மறக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மத்திய செயற்பாடுகளுக்கான கட்டிடத் தொகுதி திறப்புவிழா நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜனாதிபதி, கட்டிடத் தொகுதியைத் திறந்து வைத்து தமிழில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்ட மக்கள் எல்லோருக்கும் மிகவும் சந்தோசமான நாள். இந்த புதிய வைத்தியசாலை கட்டிடத் தொகுதி மூலம் பல ஆயிரம் பேர் நன்மை பெறுவார்கள். யாருக்காக இதைச் செய்கின்றோம்;யாருக்காக இதைச்செய்தோம்? மக்களுக்காக (20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டாம்

### சர்வதேச நீதியாளர் குழு கோரிக்கை

(கொழும்பு)

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்துவதற்கான இடத்தினை மாற்றுமாறு சர்வதேச நீதியாளர் குழு பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சர்வதேச நீதியாளர் குழு அவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்துடன், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்கெனவே அனுப்பிவைத்திருந்த கடிதத்தையும் இணைத்துள்ளது.

தங்களின் முன்னைய அறிக்கைகளை கருத்திற்கொண்டு 2013 பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சிமாநாடு நடத்தவுள்ள இடத்தினை மாற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் மனித உரிமை மீறல்கள் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை

### - அயர்லாந்து அமைச்சர்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் ஐரோப்பிய ஒன்றியம் முன்னுரிமை கொடுக்க வேண்டியவற்றில் ஒன்றாக இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும் என அயர்லாந்து அரசின் ஐரோப்பிய ஒன்றிய விவகாரங்களுக்கான அமைச்சர் லூசின்டா கிறிடன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் விடயங்களில் ஐரோப்பிய ஒன்றியம் திடசங்கற்பம் பூண்டுள்ளதென்றும் , தற்போது அவ்விடயத்தில் அதிக செயற்பாடுகளுக்கு முன்னுரிமையினை ஒன்றியம் கொண்டுள்ளதனால் ஐ.நா மனித உரிமைச் சபையினையும் கருத்தில் எடுக்க வேண்டியதாகவுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் இருவரும் பெற்றோரிடம் நேற்று ஒப்படைப்பு



யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் நேற்றைய தினம் புனர்வாழ்வு தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே குறித்த இரு மாண (20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் தொடர் மழை; குளங்கள் வான் பாய்கிறது

(மல்லாவி)

வன்னியில் பெய்யும் தொடர் மழை காரணமாக பெரிய குளங்களின் வான் கதவுகளைத் தாண்டி நீர் பாய்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் 3 அடி ஒரு அங்குல மேலதிக நீரும், முத்தையன்கட்டுக்குளம் ஒரு அடி ஒரு அங்குலம் மேலதிக நீரும் பாய்கிறது.

அதிகளவு நீரினால் மாந்தை கிழக்கு பிரதேச பிரிவில் உள்ள பாண்டியன்குளம் பகுதி, நொற்றான் கண்டல் உட்பட பல கிராமங்களுக்கு தரைவழி பாதை நேற்று துண்டிக்கப்பட்டுள்ளது.

வெள்ள நீர் (20ஆம் பக்கம் பார்க்க)

## தண்டனையில் இருந்து தப்பிவிட முடியாது!

### - கருணாநிதி

உலக நாடுகளின் கண்டனத்திலிருந்தும், தண்டனையில் இருந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தப்பிவிடமுடியாது என்பதே உலகமெங்கும் வாழும் தமிழர்களின் நம்பிக்கை என தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில்தமிழர்வாழும்89கிராமங்களின் தமிழ் பெயர்களை சிங்கள பெயர்களாக மாற்றியதை ஆதாரங் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சந்தர்ப்பம் நழுவி சங்கடமானது’

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மத்திய செயற்பாடுகளுக்கான கட்டிடத் தொகுதி திறப்பு விழாவில் ஜனாதிபதியுடன் லிப்டில் பயணிக்க முயற்சித்தநாடாளுமன்றஉறுப்பினர்அ.விநாயகமூர்த்தியை ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் இறக்கிவிட்டனர்.

குறித்த கட்டிடத் தொகுதி திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்படாததால் ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியை தவிர தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய நிகழ்விலும் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி ஜனாதிபதி வைத்தியசாலைக் கட்டிடத்தின் கீழ் தளத்தை பார்வையிட்ட பின்பு லிப்ட் மூலம் இரண்டாவது மாடிக்கு செல்ல ஆயத்தமானார்.

ஜனாதிபதியுடன் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபு ஹிடோ ஹோபோ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் லிப்டில் ஏறியபோது முண்டியடித்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினரும் ஏறினார்.

இதன் போது ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் லிப்டில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினரை இறக்க முற்பட்டனர். இருப்பினும் அதற்கு முதலில் தனது எதிர்ப்பை தெரிவித்த அவர், பின்பு ஒருவழியாக சுதாரித்துக் கொண்டு கீழே இறங்க ஒப்புக்கொண்டார்.

லிப்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் வெளியேற்றப்பட்டபோது ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார் மற்றும் செல்வேஸ்திரி அலென்ரின் ஆகியோரும் வெளியில் நின்றனர்.

லிப்டிலிருந்து வெளியேற்றப்பட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கடப்பட்ட போதும், அதைப் பொருட்படுத்தாது வெளியில் நின்ற ஏனையவர்களும் படிக்கட்டு ஊடாக இரண்டாவது மாடிக்கு சென்றனர்.

இந்த சம்பவத்திற்கு பின்பு நாடாளுமன்ற உறுப்பினரின் பிரசன்னம் நிகழ்வில் இருந்திருக்கவில்லை.

இதேவேளை நேற்றுமுன்தினம் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி ஜனாதிபதியுடன் கடும் கோபத்துடன் உரையாடியதோடு அழைப்பிதழ் வழங்கப்படாதது ஏன் எனவும் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4,6)

## பொது எதிரணியில் இணைய த.தே.கூட்டமைப்பு தீர்மானமில்லை!

(கொழும்பு)

பொது எதிரணிக் கூட்டமைப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இணைந்து செயற்படுவது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்று வரும் சர்வாதிகார குடும்ப ஆட்சிக்கு எதிராக பொது எதிரணிக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்றத்தக்கது. அதில் கையொப்பமிடுதல், செயற்படுதல் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்றார்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதனை தீர்ப்பதற்கு பொது எதிரணிக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அறிய வேண்டி தேவையும் இருக்கிறது என்று அவர் மேலும் கூறினார். (செ-11)

## இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு போட்டிகள்

(உரும்பிராய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று மதியம் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச கல்விப் பணிப்பாளர் வி.பாலசுப்பிரமணியம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (செ-11)

(யாழ்ப்பாணம்)

யா/ சுழிபுரம் விக்டோறியா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்கல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் வி.சிறீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலர் ஏ.சோதிநாதன், கௌரவ விருந்தினராக பழைய மாணவரும் ஓய்வு பெற்ற வலிகாமம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான கே.செல்வராசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (செ-5)

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி வி.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் உதவிச்செயலாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்தியன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி அலகு போதனா ஆசிரியர் திருமதி ஜே.சரவணபவ ஐயர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-11)

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு கல்லூரியின் நவரட்ணராஜா விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் கே.ஆர்.இராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக இப் பாடசாலையின் பழைய மாணவரும் ஓய்வுபெற்ற தபால் திணைக்கள நுண்பரிசோதகருமான என்.சிவானந்தனும் சிறப்புவிருந்தினராக கோப்பாய் பிரதேச கல்வி பிரிவு உத்தியோகத்தர் வி.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக கல்லூரியின் பதில் பிரதி அதிபர் என்.விஜயகுமாரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (செ-5)

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் ஆர்.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா வாழ் பழைய மாணவர் எம்.ரவிசங்கர், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-5)

# சொந்த இடங்களில் குடியமர்த்தக் கோரி உண்ணாவிரத போராட்டம் நாளை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு மீள்குடியமர்வுக் குழுவின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை தெல்லிப்பழைதுர்க்கைஅம்மன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ள உண்ணா விரதப்போராட்டத்தில் இணைந்து கொள்வதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும் மற்றும் கிராமிய உழைப்பாளர் சங்கமும் அறிவித்துள்ளன.

இது தொடர்பில் இரு அமைப்புக்களும் கூட்டாக ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளன. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாளை வலி வடக்கு மீள்குடியமர்வு குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து பூரண ஆதரவை வழங்குகின்றது.

கடந்த இருபத்து மூன்று வருடங்களாக தமது சொந்த வாழ்விடங்களை இழந்து இன்னமும் முகாம் வாழ்க்கைகளில் தமது எதிர்கால சந்ததியின் சுபீட்சமான வாழ்வை தொலைத்து மக்கள் வாழ்ந்துவருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழித்து விட்ட நிலையில் சொந்த நிலத்திற்கு செல்லவிடாமையானது தமக்கு பெரும் ஏமாற்றத்தை தருவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் இடம்பெயர்ந்து இன்னும் முகாம் வாழ்க்கையே வாழ்வதால் பல இன்னல்களையும், துன்பங்களையும் சுமக்கின்றோம். தொழில்வாய்ப்பு இல்லாமையினால் வறுமை ஒருபக்கம், எமது பிள்ளைகளின் கல்விக்கு உதவ முடியாதவர்களாக உள்ளோம்.

கடந்த மூன்று வருடங்களாக எமக்கு வழங்கப்பட்டு வந்த இடம்பெயர் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டால் நீங்கள் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் என்ற காரணத்தினால் தான் உங்களுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

அப்படியானால் எங்களை சொந்த இடங்களிற்கு விடுங்கள் எங்களுக்கு நிவாரணம் தேவையில்லை. நாம் உழைத்து சாப்பிடுவோம் என்று கேட்கின்றபோது இதற்கு நாம் பொறுப்பில்லை அரசாங்கமும் பாதுகாப்பு தரப்புமே பொறுப்பு என்று கூறி பொறுப்பான அதிகாரிகள் கையை விரிக்கின்றனர் என்று பாதிக்கப்படும் மக்கள் கண்ணீர் மல்க தமது கோசங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கும் இவ் வேளையில் வலி வடக்கு மீள்குடியமர்வுக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ள இந்த சாத்வீகப் போராட்டம் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த சிறந்ததொரு களமாக அமைந்துள்ளது.

அந்த வகையில் ஏற்பாட்டுக் குழுவினருக்கு எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளும் விதமாக அனைவரும் அணிதிரள வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமது உரிமைக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் போராடாத எந்த ஒரு சமூகமும் உயிர் வாழ்ந்ததாக சரித்திரமும் இல்லை என்பதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-5)


பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின்
பிறந்த நூற்றாண்டை (1916 - 2016) முன்னிட்டு
வேதாந்த மடத்தின் ஏற்பாட்டில்

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**
நடாத்தும்
**ஞான யக்ஞம்**

**மனதில் சஞ்சலமா?**
தீர்வு தருகிறது கீதை!
(ஸ்ரீமத் பகவத்கீதை அத். I & II)

**வழங்குபவர்**
பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.

(அ-2422)

**இடம்:** வேதாந்த மடம்
இல.18, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**காலம்:** 16.02.2013 சனிக்கிழமை முதல் 20.02.2013 புதன்கிழமை வரைதினமும் மாலை 6.00 மணிமுதல் 7.30 மணிவரை.
அனுமதி இலவசம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


வேதாந்த மடம்
இல.18, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P.:021 300 2634, 077 990 5818

சின்மயா மிஷன் - யாழ்ப்பாணம்,
இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
(கோவில் வீதி ஊடாக),நல்லூர்.
T.P.:0776491828
jagrat@chinmayalanka.org





**31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்**



கடந்த 15.01.2013 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் திரு.சதாசிவம் கந்தசாமி**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 12.02.2013 செவ்வாய்க்கிழமை அன்று பாலியாறு தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.02.2013) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத் திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.253. [illegible]
நட்டாங்கண்டல் [illegible]

கருணாகரன் (ஆசிரியர்)

**காணி விற்பனைக்கு**

அளவெட்டி அலுக்கைச் சந்தியிலிருந்து அம்பனைக்குப் போகும் றோட்டில் (அளவெட்டி மத்தி) 5 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772985314

(1735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சிறுவர் உளவியல்

குழந்தைகள் விடயத்திலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெற்றோருக்கு இது தொடர்பான விடயம் சரியாகத் தெரிவதில்லை. பெற்றோர் சரியாக இல்லையென்றால் குழந்தைகளுக்கு பலவிதமான மனோதத்துவ நோய்கள் வந்து விடும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

குழந்தைகளிடம் அன்பை வெளிக்காட்டுங்கள். வேண்டாம் என்று கூறவில்லை... அந்த அன்பு மென்மையாக இருக்கட்டும் முரட்டுத்தனமானதாக இருக்க வேண்டாம். ''என் கண்ணே!'' என்று சொல்லிக் கொண்டு பல்லை நறுமிக் கொண்டு சில பெற்றோர் குழந்தைகளிடம் போவார்கள்– அவ்வளவுதான் அழுத்தமான அன்பு.

முரட்டுத்தனமான அன்பை குழந்தைகளிடம் திணிக்கும் போது அதனுடைய உடல் கெட்டுப் போகிறது. மனதில் ஒருவகை பதற்றம் தோன்றும். உடல்நிலை சந்தோஷம் அற்று இருக்கும்.

ஒரு பன்னிரெண்டு வயது சிறுமி, அடிக்கடி மயக்கம், வாந்தி, இவ்வாறு பல நோய்கள்; பல வைத்தியரையும் நாடியும் நோய் தீருவதாக இல்லை. எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

இதற்குக் காரணம் என்ன என்பதை நீண்ட நாட்களுக்கு பின்புதான் கண்டுபிடித்தார்கள்.

அந்தச் சிறுமியின் பெற்றோர் அடிக்கடி சண்டை பிடிப்பார்கள். அதை அவதானிக்கும் போதெல்லாம் இந்தக் குழந்தைக்கு வாந்தி வந்து விடும்; மயக்கம் வந்து விடும். ஏதோவெல்லாம் பேச ஆரம்பித்து விடும். இரண்டு, மூன்று நாட்களுக்கு சிறுமியின் கதை மாறாது. பின்னர் படிப்படியாக சரியாகப் போய்விடும்.

பெற்றோர் சண்டை பிடிக்கும் போது பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத உணர்வு, பயம் இவை அனைத்தும் மனதிலே தங்கி விடும். பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு குறையும்; அன்பு இல்லாது போய்விடும். வெறுப்புணர்வு ஏற்படும். மனநோய், உடல் நோய் இவை இரண்டும் வந்து விடும்.

இன்னொரு குழந்தை சிறுவயதிலே ஆரோக்கியமாகத்தான் இருந்தது. வாலிப பருவத்தை அடையும்போது ஆஸ்துமா நோய் அவனை பிடித்துக் கொண்டது.

ஆனால், அவர்களது குடும்பத்தில் இந்நோய் யாருக்கும் கிடையாது.

இதற்கு என்ன காரணம் என்பதை பின்புதான் கண்டு பிடித்தார்கள்.

அவனது பெற்றோரின் வன்மையான கண்டிப்பு. அவனை கட்டுப்படுத்தி வளர்க்க வேண்டும் என்று நினைத்து அதிகாரத்தை அவன் மேலே திணித்துள்ளார்கள்.

"மூடு வாயை... சத்தம் வெளியே வரக்கூடாது..." அப்படி உரத்த தொனியில் பயமுறுத்தி, அவனது அழுகையை சிறுவயதினில் இருந்து அடக்கி விட்டார்கள். அதன்பின்னர் கூட அவன் அழ வேண்டிய விடயம் ஏதும் ஏற்பட்டால் முடியாது திண்டாடுவான். மனதினுள் வேதனை முட்டிய போதும் அழ முடியாது கஷ்டப்படுவான். கண்ணிலே கண்ணீர் வெளிவராது. கடைசியிலே அது ஆஸ்துமா நோயாக உருவெடுத்தது.

ஒரு குழந்தை அழுதா... ''இதுக்கெல்லாம் போய் அழுவார்களா... இது சிறிய விடயம்'' என்று பக்குவமாக எடுத்துக் கூற வேண்டும். அதுதான் நல்லது. அதுதான் தாயன்பு.

பிள்ளையைப் பெற்றெடுத்தால் மட்டும் போதாது. அக்குழந்தையை ஆரம்பத்தில் இருந்தே அன்பாக வளர்த்தெடுக்க பெற்றோர் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு பெண் தாய்மை அடைவது என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட வரம். அதிலும் அறிவுள்ள பிள்ளையாக வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சிறுவர் பாதுகாப்பு, உரிமைகள் தொடர்பிலான விவாதப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விவாத போட்டிகளை நடத்துதல் தொடர்பாக LEADS நிறுவனத்தினரால் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவினூடாக அனுமதி கோரியதற்கு அமைவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். அதற்கமைவாக குறித்த விவாத போட்டியானது எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிப்பிரிவு வளாகம், (போதனா வைத்திய சாலை முன்பாக) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான பொதுவிதி முறைகளாக 18 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மாத்திரமே போட்டிகளில் பங்கு கொள்ள முடியும். போட்டிகளில் பங்கேற்கும் போது வயதை உறுதிப்படுத்தும் ஆவணமொன்றைப் போட்டியாளர்கள் தம்வசம் வைத்திருத்தல் கட்டாயமானது. போட்டிகள யாவும் தமிழ்மொழி மூலம் நடைபெறும். தலைப்புக்கள் யாவும் முற்று முழுதாகச் சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பானதாகவே அமைந்திருக்கும். அத்துடன் விசேட விதமாக இப்போட்டிகளின் போது எத்தகைய விடயங்களைக் குறித்து விவாதித்து விவாதிக்க வேண்டுமென்பதைத் தெரிவிப்பதற்குப் பிள்ளைகளிற்கும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு போட்டியின் ஆரம்பத்தில் பங்குபற்றும் பிள்ளைகளிடம் இருந்தும் கருத்துக்கள் பெறப்படவிருக்கின்றன.

எனவே, காத்திரமான மிகவும் அவசியமான எத்தகைய விடயங்களை விவாதிப்பது பயனுள்ளது என்பது குறித்துத் தங்களின் பிள்ளைகளும் அந்த நேரத்தில் கருத்துக்களை முன்வைக்கலாம். பெறுமதியான கருத்துக்கள் விவாதத்தலைப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படும்.

போட்டிகளின் போது அணியொன்று தெரிவிக்கும் கருத்துக்களின் சுருக்க வடிவத்தினை எழுத்து வடிவத்தில் அந்தந்த அணியினரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டிகளின் போது உசாத்துணைகளைப் பன்படுத்த அனுமதி உண்டு.

முதல் சுற்றுப் போட்டிகள் லீக் முறையிலும் காலிறுதிப் போட்டியிலிருந்து விலகல் முறையிலும் நடைபெறும்.

ஒவ்வொரு பாடசாலை அணியும் மூன்று பிள்ளைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களுக்கும் சிறந்த பேச்சாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்களும் பதக்கங்களும் தேசிய ரீதியிலான பெறுமதியான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் பாடசாலை அணியின் விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் மாவட்ட அதிகாரி, LEADS, சிறுவர் பாதுகாப்புப் பிரிவு, 41, விதான்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக தகவல்களை 021 222 3486, 077 313 9896 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 20 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 240 | 300 |
| தக்காளி | 100 | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 50 | 60 |
| கரட் | 100 | 100 | 110 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 60 | 100-120 | 90-140 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 100 | 100 |
| பாகற்காய் | 60 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 50 | 70 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 160 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | -- |
| போஞ்சி | 40 | 50 | 60 | 120 |
| கத்தரிதம்புள்ள | 25 | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-25 | 20 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 20-35 | 60 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 90-110 | 110 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 70-100 | 100 | 70 | 100 |

# இராசி பலன்

14.02.2013
(மாசி 02, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.33 மணிவரை
ரேவதி முழுவதும்
இராகுகாலம் 2.03-3.33 மணிவரை
சுபநேரம் 8.03-9.33 மணிவரை
காதலர் தினம்.

**மேடம்** பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் காட்டுவீர்கள், குரு வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை அமையலாம்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கட்டடப் பணியைத் தொடரும் எண்ணம் உருவாகும், தொல்லை கொடுத்தவர்கள் மனம் மாறி தொழில் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள், கிடைக்குமோ கிடைக்காதோ என நினைத்த பொருள் எளிதில் கிடைக்கலாம், பயணங்கள் கைகூடும்.

**சிங்கம்** வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கலாம், உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, நட்பொன்று பகையாகலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கன்னி** குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், திருமண முயற்சிகள் கைகூடலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, உடல் நலம் சீராகும், எடுத்த காரியங்கள் கைகூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** பூர்வ புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** தொழிலில் பிறரது ஆதரவைப் பெறுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், குடும்பத்தினரிடம் முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தமிழில் உரையாற்ற சிங்களத்தில் கீதம் இசைப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற கட்டடத்திறப்பு விழாவில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதனால் அங்கு சற்று நேரம் சலனம் நிலவியது.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழில் உரையாற்றிய போதும் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை அங்கு குழப்ப நிலையை ஏற்படுத்தியிருந்தது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள 5 மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்று காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இதில் தமிழ்க் கலாச்சார நடனம் மூலம் ஜனாதிபதி அழைத்து வரப்பட்ட போதிலும் வைத்தியசாலைப் பணிப்பாளரினால் வெற்றிலை கொடுக்கப்பட்டே வரவேற்கப்பட்டார்.

பின்னர் இறுதியில் சிங்கள மொழி மூலம் தேசிய கீதம் இசைக்கப்பட்டே நிகழ்வு முடிபுக்கு கொண்டு வரப்பட்டது. (அ-4-6)



நன்றி:- மிரர்

## நீர் விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் கோண்டாவில் நீரேந்து நிலையத்திலிருந்து பிரதான நீர்த் தாங்கிக்கு நீர் ஏற்றும் 12'' குழாயில் ஏற்பட்டுள்ள உடைவினை சீர்செய்யும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இரு தினங்கள் நீர்விநியோகம் தடைப்படும் என யாழ்.மாநகரசபை நீர் வேலைப் பொறியியலாளர் து.இராஜன் தெரிவித்துள்ளார். (அ-5)

## மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சி நாளை

(பண்டத்தரிப்பு)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வலிகாமம் மேற்கு மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சியும் கலை நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன், வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி பிரிவு மாவட்ட உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராஜன், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் இணைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.பாலகிருஷ்ணன், வட்டு. கிழக்கு கிராம சேவையாளர் க.ஶ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஒப்பர் சிலோன் ஆலோசகர் ஆர்.பேரின்பநாயகம், ஒப்பர் சிலோன் மாவட்ட இணைப்பாளர் ரி.கந்தசாமி, சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க உபதலைவர் ம.சற்குணசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஶ்ரீ முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

முதலாம் நாளாகிய அன்றைய தினம் காலை 8 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 11 மணிக்கு கொடியேற்றமும் இடம்பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளதாக சுதுமலை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-5)

## என் நண்பன் இசை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய பங்குத்திருச்சபையைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவன் ஜே.றொகான் முயற்சியில் உருவாகிய என் நண்பன் இசை வெளியீட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இசை வெளியீட்டு விழாவில் இசை இறுவெட்டை யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஃபி.யஸ்ரின்ஞானப் பிரகாசம் அடிகளார் வெளியிட்டு வைக்க புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்பணி எம்.ஏ.பி.ஆர்.சௌந்தரநாயகம் அடிகளார் பெற்றுக்கொள்ளவுள்ளார். (அ-5)

# தென்னிலங்கைக்கு சமனாக யாழ்.சுகாதாரத்துறை வளர்ச்சி

## சுகாதாரத்துறை அமைச்சர் புகழாரம்

**(யாழ்ப்பாணம்)**

**தென்னிலங்கைக்கு சமனாக யாழ்ப்பாணத்தில் சுகாதாரத்துறை வளர்ச்சியடைந்துள்ளது என சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.**

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் யுத்தம் முடிபடைந்து கடந்த நான்கு வருட காலமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அபிவிருத்தியினை மேற்கொண்டு வருகின்றார்.

இவ் அபிவிருத்தி தென்னிலங்கையில் மட்டுமல்லாது வடக்கிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக சுகாதாரத்துறை ஜனாதிபதியின் காலத்தில் வடக்கில் அதி முன்னேற்றம் கண்டுள்ளது எனலாம்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு 100 வைத்திய நிபுணர்களே வைத்தியம் செய்தனர். ஆனால் தற்போது 400 வைத்திய நிபுணர்கள் வைத்தியம் செய்கின்றனர்.

தென்னிலங்கையில் எத்தனை வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் காணப்படுகின்றனரோ அதே எண்ணிக்கையிலான வைத்தியர்களே இங்கும் கடமையில் ஈடுபடுகின்றனர்.

கடந்த 4 வருடங்களில் அரச உயர் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியும் கூட யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இங்குள்ள மக்களின் தேவைகளினை கண்டறிந்து கொள்கின்றனர்.

30 வருடகால போரினால் பாதிப்படைந்த இடங்களில் சுகாதாரத்துறை மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போதும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ் அபிவிருத்திகளிற்கு மத்தியில் இன்று (நேற்று) ஜனாதிபதியினால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை யாழ்ப்பாண மக்களிற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

எனினும் இவ் அபிவிருத்திகளிற்கு பாராட்டு தெரிவிக்காமல் இங்குள்ள சிலர் குறை கூறி வருகின்றனர்.

இன்னும் சிலர் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு குற்றவாளிக் கூண்டில் தள்ளிவிட முயற்சித்து வருகின்றனர்.

அவர்கள் முதலில் இங்கு வந்து இங்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித்திட்டங்களினை பார்வையிடல் வேண்டும் என்றார். (அ-4-6)




## பருத்தித்துறை-தொண்டைமானாறு ஊடான வீதியை புனரமைக்க கோரிக்கை

(தும்பளை)

பருத்தித்துறை-தொண்டைமானாறு ஊடான 751 ஆம் இலக்க போக்குவரத்து சேவைக்கான வீதி புனரமைக்கப்படாமல் உள்ளதால் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வீதியானது புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய அபாய நிலை உள்ளது.

மழை காலங்களில் இவ்வீதியில் பயணிப்போரின் வாகனங்கள் பள்ளத்தினுள் புதையுண்டு போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை ஏற்படுத்துகின்றது.

இவ்வீதியால் தினமும் பல நூற்றுக்கணக்கான பயணிகளும் வாகனங்களும் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே, உரிய தரப்பினர் இவ்வீதியின் நிலையைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-19)

# இரு மதுபானசாலைகளை இடம்நகர்த்த பரிசீலிக்குக

## வலி.தென்மே. பிரதேச சபை கோரிக்கை

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு மதுபான சாலைகளை அகற்றி அவற்றை வேறு இடங்களிற்கு நகர்த்துவது தொடர்பில் பரிசீலிக்கும்படி மதுவரித்திணைக்களத்தை வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் கோரியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது குறித்த இரு மதுபானசாலைகளும் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில், பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் என்பவற்றிற்கு அண்மையில் அமைந்துள்ளன.

இதனால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அதை அகற்றி வேறு இடத்திற்கு நகர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து மதுவரித் திணைக்களத்திடம் மேற்படி கோரிக்கையை பிரதேச சபை தவிசாளர் விடுத்துள்ளார். (அ-5-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கக்கூட்டம்

(தும்பளை)

சமுர்த்தி அதிகார சபையை திணைக்களமாக மாற்றுதல் தொடர்பான விளக்கக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், சங்கத்தின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு ஒவ்வொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் 5 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வீதம் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-19)

## சிகை ஒப்பனை சங்க பொதுக்கூட்டம்

(தும்பளை)

வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வருடாந்த கூட்டமும் நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நெல்லியடி பழைய சந்தை மேல் மாடிக் கட்டடத்தில் உள்ள சங்க காரியாலயத்தில் சங்கத்தலைவர் எஸ். [illegible] குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-19)

# வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் கேள்வியால் ஒரு வேள்வி நிகழ்வு

(வவுனியா)

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் ***கேள்வியால் ஒரு வேள்வி*** என்னும் அறிவோர் நிகழ்ச்சி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தொழிலதிபர் வேலாயுதன் சுரேந்திரன் அவரது பாரியார் திருமதி சுரேந்திரன் வசந்தமலர் ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றி வைப்பர்.

தொடக்கவுரையினை வவுனியா மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சன் சறோஜினிதேவி நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும். தமது துறைசார்ந்து சமூகப்பணிகளாற்றி தேசிய விருதுகள் பெற்ற பெரியோர்களான தேசமான்ய அரிமா கந்தசாமி சிவபாலன், தேசப்பந்து மயில்வாகனம் சிவபாதசுந்தரம் ஆகியோர் தமிழ்ச்சங்கத்தால் கௌரவிக்கப்படுவர்.

அடுத்து வவுனியா மாவட்டத்தில் யதார்த்தத்தில் உள்ள பிரச்சினைகள் பற்றி அவ்வவ் துறை சார்ந்த வல்லுநர்கள் ஒன்பது பேர்களிடம் விடுக்கப்படும் வினாக்களும் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் இலக்கியம் சார்பாக வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.உதயகுமாரும் மருத்துவம் சார்பாக வவுனியா பொது வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி புவனேந்திரநாதன் ஆதவனும் நகரக்கட்டுமானம் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பொறியியலாளர் ந.ஸ்ரீஸ்கந்தராசாவும் சட்டம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கந்தசாமி தயாபரனும் சமூகநலம் தொடர்பாக வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசனும் இசை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ந.பரந்தாமனும் சமயங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ நா. பிரபாகரக்குருக்கள், வவுனியா அமைதியக மறை உரைஞர் முதல்வர் அருட்பணி ஸ்ரனி அன்ரனி அடிகளார், வவுனியா பட்டாணிக்சூர் ஜும்மா பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர் மௌலவி ஜனாப் செ.அப்துல்சமட் ஆகியோரும் வினாக்களுக்குப் பதில் வழங்கவுள்ளார்கள். (அ-2-266)



இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் கோவில் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# ஐரோ.ஒன்றியத்துடன் உறவினை வலுப்படுத்த இலங்கை விருப்பம்

ஐரோப்பிய ஒன்றியத்துடன் சிறந்த உறவுகளைப் பேண விரும்புவதாக இலங்கை அறிவித்துள்ளது.

இறைமையுடைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இலங்கையும் நல்லாட்சி, சமூக நீதி, சமத்துவம் போன்ற விடங்களில் வெவ்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி இலக்குகளை அடைந்த போதிலும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக பெல்ஜியத்திற்கான இலங்கைத் தூதுவர் பி.எம்.ஹம்சா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவிற்கும் இலங்கைக்கும் 400 ஆண்டுகள் உறவுகள் நீடித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலாசாரம், சமூகம், கல்வி மற்றும் வாழ்வாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் சிறந்த உறவுகள் நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். 30 ஆண்டு கால பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டு நாடு முன்னேற்றத்தை பதிவு செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யுங்கள்

## வைகோ ஐ.நாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலை யீடு செய்ய வேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் வலுயுறுத்தியுள்ளது.

சென்னையிலுள்ள ஐ.நா அலுவலகத்தை முற்றுகையிட முயற்சித்த போது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் வைகோ உள்ளிட்ட 500 செயற்பாட்டாளர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் உலக தமிழர் பேரவையின் தலைவர் பழ நெடுமாறனும் அடங் குவதாக செய்திகள் வெளியிட்டுள்ளன.

கைதுசெய்யப்படுவதற்கு முன்னதாக ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட வைகோ, இலங்கைத் தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த ஐ.நா நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் நம்பிக்கை வைக்க முடியாது என பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார். (அ-2)

## கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வர்த்தக சங்க தலைமை காரியாலயத்தில் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு கந்தப்பசேகரம் வீதி, ஆஸ்பத்திரி வீதி (கந்தப்பசேகரம் வீதிக்கு சமாந்தரமாகவுள்ள) கடை உரிமையாளர்கள், காணி உரிமையாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இதில் மாநகர சபை உத்தியோகத்தர்களும் வர்த்தக சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார். (அ)

## துடுப்பாட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(மானிப்பாய்)

இணுவில் பொது நூலகத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டுநடத்தப்படும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் பங்கு பெற விரும்பும் கழகங்கள் விண்ணப்பங்களை மேற்கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர்.

ஓர் அணியில் 7 வீரர்கள் பங்கு கொள்ளும் 6 பந்து பரிமாற்றங்களை கொண்டதாக இத்துடுப்பாட்ட சுற்றுப்போட்டி அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-23)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>உயரம்: 5'9"<br>கி.பா: 22<br>தகைமை/தொழில்: A/L, GAQ<br>(முகாமைத்துவ உதவியாளர்)<br>தொ.இ: B -1177 | பிறப்பு: 1985 இந்து செட்டியார்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா: 11.5<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1184 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'2"<br>கி.பா: 4.5<br>தகைமை/தொழில்:MBBS Dr<br>தொ.இ: B -1201 | பிறப்பு: 1980 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'3"<br>தகைமை/ தொழில்: A/L<br>(கனடா PR)<br>தொ.இ: G-1185 |
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: Computer Science (UK Student visa)<br>தொ.இ: B -1203 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'3"<br>கி.பா:66.75, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, தாதி<br>தொ.இ: G -1186 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'9"<br>கி.பா: 24<br>தகைமை/தொழில்: BSc Engineering, முகாமைத்துவ பணிப்பாளர்<br>தொ.இ: B -1206 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா: 35<br>தகைமை/ தொழில்: A/L,(கல்வியியற் கல்லூரி)<br>(விஞ்ஞான ஆசிரியர்)<br>தொ.இ: G -1188 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறாது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டம் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் முழுமையான ஜனநாயக அடிப்படையில் மேற்கொள்ளப்படும். எதிர்வரும் மாதங்களில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த அரசாங்கத்திற்கு சவால் விடுக்கக் கூடிய எதிர்க்கட்சியொன்று இல்லாத காரணத்தினால் தேர்தல்களை விடவும் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஆட்சி நீடிப்பு ஆதரவளிக்க விரும்புவார்கள் என பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன குறிப்பிட்டிருக்கலாம் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களை நடத்தி பணத்தை விரயப்படுத்துவதனை விடவும் ஆட்சி நீடிப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு போதுமானது என பிரதியமைச்சர் அபேகுணவர்த்தன கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அமைச்சர் ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான தகவல்கள் வெளியான போதிலும் இதேபோன்று அரசாங்கம் வன்மையாக தகவல்களை எதிர்த்ததாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இவ்வாறு மறுப்பு அறிக்கைகளை வெளியிட்டு மக்களை திசை திருப்பி தனக்கு தேவையானவற்றை செய்து கொள்வதில் அரசாங்கம் பாண்டித்தியம் பெற்றுக் கொண்டுள்ளதாக கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பிலும் இதேமாதிரியான அணுகுமுறையை அரசாங்கம் பின்பற்றக் கூடுமென தெரிவித்துள்ளது. (அ–2)

# இல்ல மெய்வல்லுநர்போட்டி

(கைதடி)

கைதடி சேதுகாவலர் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி. ராஜேஸ்வரி திருஞானசிவம் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்து பௌத்த கலாசார சங்கத் தலைவர் என்ரி எஸ். இராமச்சந்திரன், வடமாகாண கணக்காய்வு திணைக்கள உத்தியோகத்தர் வே.தயாளன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ–2)

* * * * *

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் வே.க. இரத்தினகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்வி பணிப்பாளர் செ. சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் என். எஸ். ஆர். சிவரூபன், கௌரவ விருந்தினராக சிங்கப்பூர் குடியியல்சார் பொறியியல் நிபுணத்துவ ஆலோசகர் கா. பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

* * * * *

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் தி.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் செ.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய முறைசாரப் பிரிவு செயற்றிட்ட அலுவலர் அ.சிவரூபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கல்வி கோட்ட முகாமைத்துவ உதவியாளர் இ.வசந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (அ–5)

# வன்னி மக்களின் அவலம் தீரவில்லை; அவர்களை இயற்கையும் விரட்டுகிறது

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல கிராமங்களை சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கைக்காக இயற்கையுடன் போராட வேண்டிய அவல நிலையில் வாழ்வதாக ஆதங்கப்படுகின்றனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக நலன்புரி முகாம்களில் தஞ்சம் அடைந்து மீண்டும் 2009ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட இப்பிரதேச மக்களில் அநேகமானவர்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை.

இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தில் இருந்து இவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவில்லை.

பல குடும்பங்களுக்கு குடியிருக்கும் காணிகளுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததை காரணம் காட்டி ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

கணவனை இழந்த பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதைக் காண முடிகின்றது.

இவர்கள் குடியிருந்த ஓலைக் குடிசைகளுக்குள் வெள்ளநீர் புகுந்ததன் காரணமாக உடைமைகள் பாதிப்படைந்ததுடன் வங்கிகளில் கடன் பெற்று வாழ்வாதாரத்திற்காக வயல் செய்தனர்.

இதுவும் தொடர் மழை காரணமாக அழிவடைந்துள்ளது.மேட்டுநிலங்களில் பயிர் செய்த சிறுதானிய பயிர்களான பயறு, உழுந்து உட்பட ஏனைய பயிர்களும் பயன்தரும் வேளையில் அழிவடைந்துள்ளன்.

அத்துடன் யுத்தத்தால் உறுப்புகளை இழந்த அநேகமானவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

மேலும் இங்குள்ள மாங்குளம், துணுக்காய் பிரதான வீதியானது குன்றும் குழியுமாக காட்சி தருகின்றது.

இதனை புனரமைப்பதற்கான பொறுபெடுத்த நிறுவனத்தின் வேலைகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றது.

இங்குள்ள மயானங்கள் சில பற்றைக் காடுகளாக காட்சி தருகின்றன.


நெல் வயல்களுக்கு நீர் பாய்ச்சும் கிளை வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமையால் குளத்து நீர் ஆற்றுடன் சென்று வீணாகின்றது.

இவ்வாறு பல்வேறு குறைபாடுகளுடன் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு மக்கள் போராட வேண்டியுள்ளதால் இது தொடர்பாக மக்கள் நலனில் அக்கறை கொண்ட அதகாரிகள் நடவடிக்கை எடுப்ப ார்களா?என மக்கள் காத்திருக்கின்றனர். (அ–3–15)




யாழ்.போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட 5 மாடிக்கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் திறந்து வைத்தபோது. (படங்கள்–எஸ்.ஆர்.கரன் , உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.சத்தியபாலன் உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வினையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி கீதா சத்தியபாலன் வெற்றியீட்டிய மாணவனுக்கு பதக்கம் அணிவித்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

# கடன் பெற்று மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியில் நன்மை ஏற்படாது

## ஜே.வி. பி கட்சி குற்றச்சாட்டு

மக்களை ஏமாற்றும் அபிவிருத்தி திட்டங்களினால் எவ்வித பயனும் கிடையாது என ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளாது.

கைத்தொழில்களை மேம்படுத்தி உற்பத்தியை பெருக்கி அதன்மூலமே அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமென ஜே.வி.பி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பாரியளவில்வெளிநாட்டுக்கடன்களைப்பெற்றுக் கொண்டு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் எவ்வித பயனும் கிடையாது.

கடன் பெற்றுக் கொண்டு மேற்கொள்ளப்படும் போலி அபிவிருத்தி திட்டங்களினால் நாடு மேலும் மேலும் பாதாளத்திற்கு செல்ல நேரிடும். இந்த நாட்டின் கைத்தொழிற்றுறைகளில் எவ்வித அபிவிருத்தியும் கிடையாது.

அநேகமான கைத்தொழில் துறைகளில் நட்டம் ஏற்பட்டுள்ளது. மின்சாரம், போக்குவரத்து, தேயிலை, இறப்பர், மீன்பிடி, பெற்றோலிய வளம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

இவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. கடன் பெற்றுக் கொள்வதும், வட்டி செலுத்துவதுமே அரசாங்கத்தின் பிரதான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

என்ன பிரச்சினை இருந்தாலும் ராஜபக்ச குடும்பத்தினர் ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். வீதி அபிவிருத்தி, பாலம் கட்டுதல் என பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகளினால் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆமை முட்டைகள் நாற்பது மீட்பு

(கொழும்பு)

அம்பலாந்தோட்ட கொடவாவ கடற்பரப்பு பகுதியில் பை ஒன்றினால் ஆமை முட்டைகள் சுற்றிக்கட்டி வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

அம்பலாந்தோட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து 40 முட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட முட்டைகள் களமெட்டிய வன ஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# துணுக்காய் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளான மு/ஒதியமலை அ.த.க. பாடசாலை, மு/ஆலங்குளம் அ.த.க. பாடசாலை, மு/புத்துவெட்டுவான் அ.த.க. பாடசாலை, மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், மு/புலுமச்சி நாதகுளம் அ.த.க பாடசாலை, மு/வவுனியாக்குளம் மத்திய துலுசு அ.த.க பாடசாலை, மு/ காதலியார் சமளங்குளம் ஆகிய பாடசாலைகளுக்கு கடமை நிறைவேற்றும் அதிபர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தகைமையுடைய ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். மேற்படி பதவிக்கு ஆகக் குறைந்தது மூன்று வருட காலமேனும் கடமையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவை I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-I, இலங்கை ஆசிரியர்சேவை I, 2-I ஆகிய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை 2-II ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கும் இடத்து அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் எழுத்து பரீட்சை, நேர்முகப்பரீட்சை என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், துணுக் காய், ஏ9 வீதி, மாங்குளம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (அ-3-15)

# கறுப்புப் பணத்தை வைத்திருக்கும் இந்திய பிரபல்யங்கள் விபரம்

## விக்கிலீக்ஸ் வெளியிட்டது

சுவிஸ் வங்கியிலே கறுப்புப் பணமாக வைத்திருக்கும் முதல் 13 இந்தியர்களின் பெயர் விபரங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. இதன் பிரகாரம் ராஜ் பவுண்டேசன்- 189008 கோடி ரூபா , அர்சத்மேதா- 135800 கோடி ரூபா, லல்லு பிரசாத் யாதவ்- 28900 கோடி ரூபா, ராஜீவ்காந்தி- 19800 கோடி ரூபா, கருணாநிதி- 35000 கோடி ரூபா, சிதம்பரம் - 32000 கோடி ரூபா, சரத்பவார்- 28000 கோடி ரூபா, கலாநிதிமாறன்- 15000 கோடி ரூபா, எச்.டி. குமாரசாமி- 14500 கோடி ரூபா, ஜே.எம்.சிந்தியா- 9000 கோடி ரூபா, கேடன் பிரகாஷ்-8200 கோடி ரூபா , ஏ.ராஜா- 7800 கோடி ரூபா, சுரேஷ் கல்மாடி- 5900 கோடி ரூபா (அ-2)

# ஐ.தே.க.அரசும் எனது கட்சி உறுப்பினர்களைக் கொன்றது

## சோமவன்ச குற்றச்சாட்டு

வழக்கு விசாரணைகள் இன்றி ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் தமது கட்சியின் உறுப்பினர்களைக் கொலை செய்ததாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்காத அந்தக்கட்சி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட 104 பேரை சுட்டுக்கொன்றது.

ஜே.வி.பி.மேற்கொண்ட சிவில் போரின் போது ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் நடத்திய தாக்குதல்கள் பற்றி கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் விபரிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.வி.பி.தலைமையில் தாம் மேற்கொண்ட போரின்போது துப்பாக்கிகளை பயன்படுத்தியதாகவும் துப்பாக்கி தோட்டாக்கள் மூலம் மனிதர்களை கொலை செய்ததாகவும் சோமவன்ச ஏற்றுக்கொண்டுள்ளார்.

அத்துடன் ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினர்களில் தாம் மாத்திரமே ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்திடம் இருந்து உயிர்தப்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் பிரான்ஸ் நாட்டுக்கு சென்றதாகவும் அரசங்கத்தினால் கொல்லப்படுவோம் என்ற அச்சத்தில் நாடு திரும்பவில்லை எனவும் தெரிவித்தார். (அ-2)

# முதன்மையான இறைவனை எம் வாழ்வில் முதன்மையாக்குவோம்

## தவக்கால சிந்தனை


தவக்கால சிந்தனை என்கின்ற இந்த தொடரின் இரண்டாம் நாளில் இறைமகன் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கூறிய பல அறிவுரைகளில் முதன்மையான ஒன்று உங்கள் நெறி சிறந்திருக்கட்டும் என்பதைப் பற்றி சிந்திப்போம்.

பரிசேயர்கள்,மறைநூல் அறிஞர்கள் தலைமை குருக்கள் இவர்கள் அனைவருமே ஒரு வகையான நெறியை பின்பற்றினார்கள். ஆனால் அந்த நெறிகளையெல்லாம் விட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும் என்று ஒரு அழைப்பை இயேசு கொடுக்கின்றார்.

நாமும் அந்த அழைப்பை ஏற்று வாழ்வதற்கு தகுந்த ஒரு காலம் தவக்காலம். இறைவனை ஏன் நாம் முதன்மையாக ஏற்று வாழ வேண்டும் என எண்ணினால், வேதாகமத்தில் பல எடுத்துக்காட்டுக்கள் எமக்கு விளக்கம் தருகின்றன.

நானே உன் கடவுளாகிய ஆண்டவர். அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. நானே உன் கடவுளாகிய ஆண்டவர். உன் வலக்கையைப் பற்றிப் பிடித்து அஞ்சாதே, உனக்குத் துணையாய் இருப்பேன் என்று உன்னிடம் சொல்பவரும் நானே.

ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள். ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள். அவரே நம்மைப் படைத்தவர், நாம் அவர் மக்கள். நமக்கு கடவுள் ஒருவரே. அவரே நம்



தந்தை. பால்குடிக்கும் தன் மகவை தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாது இருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்று விளக்குகின்றது.

எனவே செவியைப் பொருந்தியவர் கேளாதிருப்பாரோ? கண்ணை உருவாக்கியவர் காணாதிருப்பாரோ? ஆண்டவரை எப்போதும் என் கண்முன்னே வைத்துள்ளேன். நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள் என கூறும் முதன்மையான இறைவனை எம் வாழ்வில் முதன்மையாக்குவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

369

## யாரை எப்படி நியமிப்பது?



மாளவ நாட்டு மன்னன் ஜெயசிம்மன் ஆண்டுதோறும் தசராவை விமரிசையாகக் கொண்டாடுவான். அதை ஒட்டிய கொண்டாட்டங்களில் பலவிதமான போட்டிகளும் நடைபெறுவதுண்டு.

ஒரு சமயம் மாளவ நாட்டு தளபதி பதவிக்கே புதிய நபரைத் தேர்ந்தெடுக்கும் அவசியமும் அத்துடன் படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க ஓர் அனுபவமிக்க பயிற்சியாளரை நியமிக்கவும் மன்னர் விரும்பினார். அதனால் அந்த ஆண்டு நடைபெற்ற வாள், வேல், வில், அம்புப் போட்டிகளை ஜெயசிம்மன் கூர்ந்து கவனித்தான். கலந்து கொண்டவர்களில் பெரும்பாலான போட்டிகளில் வெற்றி கண்ட இரு இளைஞர்களை ஜெயசிம்மனுக்குப் பிடித்திருந்தது. அந்த இளைஞர்களில் ஒருவன் ஜெயந்தன்; மற்றவன் சந்திரன். இருவருமே வீரத்திலும் வாட்போரிலும் சரிசமமாகக் காணப்பட்டனர். நடந்த போட்டிகளில் பாதியில் ஒருவன் முதலாகவும் மற்றதில் மற்றவன் முதலாவதாகவும் இருந்தனர். அவர்களில் யாரை பிரதம சேனாதிபதியாக்குவது?யாரைப் பயிற்சியாளராக்குவது? என்று ஜெயசிம்மனுக்கு மனக்குழப் பம் உண்டாக பொறுப்பைத் தன் முதன் மந்திரியிடம் கொடுத்தான்.

அந்த இளைஞர்களின் திறமையை இறுதிச் சோதனை க்கு உள்ளாக்க நினைத்த முதன் மந்திரி இருவரையும் தனியே அழைத்து மன்னர் தன் சார்பில் உங்கள் இருவருக்கும் தலைநகரின் எல்லையில் தலா பத்து ஏக்கர் நிலம் பரிசாக அளித்துள்ளார். நீங்கள் அதைத் தரிசாக விட்டுவைக்காமல் ஏதாவது பயிரிட்டு விவசாயம் செய்யுங்கள். அடுத்த ஆண்டு வரை நீங்கள் இங்கேயே தங்கியிருந்து அடுத்த ஆண்டு போட்டிகளிலும் கலந்து கொள்ளவேண்டும்



என்பது மன்னரின் விருப்பம் என்றார்.

இருவரும் மகிழ்ச்சியுடன் மன்னர் அளித்த நிலத்தைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் இருவருக்குமே மன்னரின் பரிசு

**அம்புலிமாமா கதைகள்**

புதிராக இருந்தது. வீரத்தைப் பாராட்டி வேறு எதையாவது பரிசாக அளித்திருக்கலாம். ஆனால் தங்களுக்கு சம்பந்தமேயற்ற விவசாயத் தொழிலுடன் தொடர்புகொண்ட ஒரு பொருளை ஏன் பரிசாக அளிக்கவேண்டும். அதுவும் தங்களை விவசாயம் ஏன் செய்யச் சொல்லவேண்டும் என்று புரியவில்லை.

இருவரில் ஜெயந்தன் திருமணம் ஆனவன். அவன் மனைவி புத்திசாலி. மன்னரின் செய்கையில் ஏதோசூட்சுமம் இருக்கிறது என்று உணர்ந்த அவள் தன் கணவனை விவசாயத்தில் ஈடுபடச் சொன்னாள். அதேசமயம் வாட்போர் பயிற்சியும் கைவிடாமல் செய்யச் சொன்னாள்.

சந்திரன் தனிக்கட்டை! அவனுக்குப்புத்தி சொல்ல பெண்டாட்டி இல்லை. அதனால் அவன் ஒரு சில விவசாயிகளிடம் தன் நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டான்.ஓர் ஆண்டு கழிந்தது. அவர்கள் இருவரின் நடவடிக்கைகளையும் ஆண்டு முழுவதும் தன் ஆட்கள் மூலம் வேவு பார்த்தார் முதன்மந்திரி. தசராவும் வந்தது. இந்தமுறை அனைத்திலும் சந்திரன் வெற்றி பெற்றான். ஜெயந்தன் தோற்றுப் போனான். இருவரையும் தனியே அழைத்த மந்திரி அவர்களுடன் நிலத்தைப் பற்றியும் அதில் உண்டான விளைச்சலைப்பற்றியும் உரையாடினார்.

தனக்குச் சிறிதும் முன்னனுபவமே இல்லாது போனாலும் ஓர் ஆண்டிலேயே ஜெயந்தன் விவசாயத்தைப் பற்றிய பல நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டிருந்தான். தன்னை முழுமையாக விவசாயத்தில் ஈடுபடுத்திக் கொண்டதனால் அதைப்பற்றிய நுணுக்கங்களைத் தவிர அவன் வயலில் அபார விளைச்சலும் கண்டிருந்தது. அந்த விளைச்சலை உண்டாக்க அவன் எத்தனை உழைக்க வேண்டியிருந்தது. என்னென்ன பிரச்சினைகளை சமாளிக்கவேண்டியிருந்தது என்றும் விளக்கினான். அதே சமயம் தன்னுடைய வாட்போர் பயிற்சியையும் விட்டுவிடாமல் இருந்தான். ஆனால் சந்திரனோ கடந்த ஓராண்டு காலத்தில் நிலம் பக்கமே செல்லவில்லையென்றும் நாள் முழுவதும் வாட்போர் பயிற்சிதான் செய்து வந்த



தாகவும் கூறினான். பின்பு ஜெயசிம்மனுடன் கலந்தாலோசித்த மந்திரி ஜெயந்தனை பிரதம தளபதி ஆகவும் சந்திரனை உபதளபதியாகவும் மன்னர் நியமித்துள்ளதாக அறிவித்தார். முதன் மந்திரியின் சிபாரிசுப்படி அறிக்கை விடுத்த ஜெயசிம்மன் அதன் பின்னர் மந்திரியிடம் அவருடைய சிபாரிசுக்கு விளக்கம் கேட்டான்.

அதற்கு மந்திரி மகாராஜா ஒன்று பிரதம சேனாதிபதிக்கான பதவி! மற்றையது பயிற்சியாளருக்கான பதவி! ஜெயந்தன், சந்திரன் இருவருமே வாட்போரில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். ஆனால் பிரதம சேனாதிபதி பதவி வகிப்பவனுக்கு வெறும் வாட்போர் தெரிந்தால் போதாது. படைகளை அணிவகுத்துச் சென்று வியூகம் அமைப்பது, எதிரிகளை முறியடிக்க பலவித உபாயங்களைக் கையாள்வது, தனது மற்றும் எதிரிகளின் மனப்பாங்கை அறிவது போன்ற விடயங்களிலும் மிகுந்த திறமை தேவை. பிரதம தளபதியாயிருப்பவனுக்கு முற்றிலும் புதிய சூழ்நிலைகளிலும் தன் படையை அணிவகுத்துச்செல்லும் திறமை தேவை. ஜெயந்தன் தனக்கு அனுபவமேயில்லாத விவசாயத்தைக் கூட ஆர்வத்துடன் கற்று அதில் சாதனை செய்தான். அதேசமயம் வாட்போர் பயிற்சியும் விடவில்லை. ஆகவே அவன் பிரதம தளபதியாயிருக்கத் தகுதியானவன் என்று முடிவு செய்தேன்.

அடுத்து சந்திரனை கவனித்துப் பார்க்கையில் அவன் மனம் விவசாயத்தில் சிறிதும் வெல்லவில்லை. மேலும் மேலும் வாட்போரிலேயே பயிற்சி செய்தான். அவனுடைய வீரமும் ஆர்வமும் உபதளபதியாகவும் பயிற்சியாளராகவும் பயன்தரும் என்று எனக்குத் தோன்றியது. ஆகவே மேற்கூறியவாறு முடிவு செய்து உங்களிடம்கூற நீங்களும் அப்படியே கட்டளை இட்டீர்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 45 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

## மனிதனை இடத்துக்கிடம் பேதப்படுத்தியது பகுத்தறிவு அல்ல; பேராசை, சுரண்டல்



"என்ன பார்க்கிறீர்கள்? ஒரு விவசாயக் குடும்பத்தின் செல்வம் இவ்வளவுதான். எங்கள் தானியக் கிடங்கும் இங்கேதான்; தாம்பத்யமும் இங்கேதான். இங்கே விவசாயிக்கும் பரதேசிக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. தன் வயிற்றுக்காக மட்டும் பரதேசி வெளியில் இருக்கிறான். இன்னும் சில வயிறுகளுக்காக விவசாயி வீட்டிலிருக்கிறான்"

எமிலியும் இஷியும் ஒருத்தரை ஒருத்தர் பாத்து உசுர் இல்லாமச் சிரிச்சுக்கிட்டாக.

சாடை பண்ணிப் பாத்தான்; சைகை பண்ணிப் பாத்தான். என்ன பண்ணியும் எடுக்க முடியல மோர்டம்ளருக்குள்ள விழுந்து வந்த சிட்டம்மா விரல.

கொடுத்த மோரக் கூசாமக் குடிச்சிருச்சுக ரெண்டும்.

"இரவு உணவு இங்கேதான்; என்ன சாப்பிடுவீர்கள்?" என்றான் சின்னப்பாண்டி.

கொஞ்சம் யோசிச்சுச் சொன்னான் இஷி: "அரிசியும் பழங்களும் எனக்கு"

பளிச்சென்று சொன்னாள் எமிலி: "அரிசியும் காய்கறிகளும் அன்று சாப்பிட்ட சூப்பும் எனக்கு"

'சூப்'புன்னதும் புரிஞ்சு போச்சு சின்னப்பாண்டிக்கு.

தமிழ்நாட்டு ரசத்தத்தான் அவ சூப்புன்னு சொல்றா. என்ன ரசவாதம் பண்ணுச்சோ ரசம்? பைத்தியமாகிப் போனா பாவம்.

"ஆத்தா! சோறு வடிச்சு ரசம் வையி. காய்கறியும் பழமும் வாங்கிட்டு வரேன் கடைக்குப் போயி"

"நீ இருப்பா நான் வாங்கிட்டு வாரேன்"- கருத்தமாயி பொறப்பட்டாரு கடைப்பக்கம்.

☆☆☆☆☆☆

சிட்டம்மா ரசம் வைக்கிறதையே கொட்டக் கொட்டப் பாத்துக்கிட்டிருக்கா எமிலி. எப்பிடியாச்சும் அந்த சூப்பு வைக்கிற சூத்திரத்தக் கண்டு புடிச்சாகணும் அவளுக்கு.

இடுப்புல கொசுவத்த இழுத்துச் சொருகி ஆரம்பிச்சிட்டா சிட்டம்மா. குத்துச் சொம்புல தண்ணி ஊத்தி ஒரு புடிச்சபுடி புளி எடுத்து ஒரு தக்காளியும் சேத்துக் கரகரன்னு கரைச்சு ஊற வச்சா. அதுல உப்புத்தூளை அள்ளி எறிஞ்சா. அதத் துண்டா எடுத்துத் தூர வச்சுட்டா. மிளகு, சீரகம் ரெண்டையும் அம்மியில வச்சு நச்சு நச்சுன்னு நசுக்குனா. பள்ளிக் கூடத்துல வாத்தியாரு தன் பிள்ளைய அடிக்கிற மாதிரி, வெள்ளைப் பூண்டைத் தட்டியும் தட்டாம வச்சுக்கிட்டா. மூணையும் ஒண்ணு சேத்தா. வ(ா)டச் சட்டியில கடலெண்ணெய ஊத்தி எளஞ்சூட்டுல சுட வச்சா. கடுகு, உளுத்தம் பருப்பு ரெண்டையும் எடுத்து எறிஞ்சா கொதிக்கிற எண்ணை மேல. அதுக சட்டுபுட்டுன்னு வெடிச்சு சட்டிக்குள்ள தீபாவளி கொண்டாடுதுக. இப்ப... கிள்ளி வச்ச பட்ட மொளகாயும் கறிவேப்பிலையும் போட்டுச் செல்லமா வதக்குனா. நான் கறுப்பாப் போகப் போறேன்னு கருவேப்பிலை சொன்னதும் நிறுத்திட்டா. நசுக்கி வச்ச மிளகு, சீரகம், பூண்டு மூணையும் இப்ப உள்ள போட்டா.

அட்டத்துல நின்னு எல்லாத்தையும் எட்டி எட்டிப் பாத்துக்கிட்டிருக்கா எமிலி. இது என்ன இது அமெரிக்கா அறியாத கூத்துன்னு ஆச்சரியப்பட்டு நிக்கிறா.

இப்ப... கரைச்சு வச்ச புளித் தண்ணிய எடுத்தா சிட்டம்மா. அதுல பொதுக்குன்னு கையவிட்டுக் கொதுக்குகள ஒதுக்கிப் புழிஞ்சு எறிஞ்சா. அடுப்புச் சட்டியில ஊத்துனா புளித் தண்ணிய.

மாமியார் மாதிரி தகதகன்னு எரிஞ்சுக்கிட்டிருந்த நெருப்பப் புதுப் பொண்ணு மாதிரி அடக்கி வாசிக்க வச்சா. ஒரே சீரா எரிச்சா.

அது பொதுபொதுன்னு சூடாகி பொத்துனாப்புல நுரை கட்டவும் ஒரு மல்லித் தழைய உள்ள போட்டுக் கொதிக்குமுன்ன எறக்கிட்டா. ஆவி பறக்காம மூடி போட்டு ஒரு ஓரமா வச்சுட்டா.

"செய்முறை இருக்கட்டும். ரசம் என்ற பானத்துக்குள் இத்தனை உள்ளீடுகளா?" திக்கு முக்காடித் திகைச்சுப் போனா எமிலி.

மடிக்கணனி எடுத்து ஒண்ணொண்ணா ஆராய்ச்சி பண்றா.

மிளகு

சுவை அரும்புகள் தூண்டுவது; புரதத்தை உடைத்துச் செரிக்கும் ஹைட்ரோ குளோரிக் அமிலம் கொண்டது.

சீரகம்

செரிமானத்திற்கான வயிற்றுச் சுவர்களைச் சரி செய்வது. மனிதத் தேவைக்கான மக்னீஷியம் கொண்டது.

பூண்டு

கிருமிகளின் முதல் எதிரி; கொழுப்புகளை உடைப்பது; பக்கவாதம் தடுப்பது; ரத்த அழுத்தம் சீர்செய்யும் செலினியம், கல்சியம், பொட்டாசியம் கொண்டது.

கடுகு

எட்டு மடங்கு உமிழ்நீர் சுரக்க வைப்பது; நல்ல கொழுப்பு உடையது.

புளி

வயிற்றுக் கோளாறு சரிசெய்து, இருதயம் வலிமை செய்வது.

தக்காளி

வெய்யிலுக்கெதிராய்த் தோல்நலம் காப்பது; விற்றமின் ஏ, டி இரண்டும் உடையது; மாரடைப்பு, புற்றுநோய் இரண்டையும் தடுப்பது.

மிளகாய்

விற்றமின் ஏ, சி இரண்டும் கொண்டது. ரத்த ஓட்டம் அதிகரிப்பது; ஆண் குறியில் புற்றுநோய் தடுப்பது.

கருவேப்பிலை

தோல் தொற்று தடுப்பது; சிறுநீரக வலி நிவாரணியாய்ச் செயற்படுவது; தாதுக்களும் நார்ச்சத்தும் மிக்கது.

மல்லித் தழை

இருப்புச் சத்து மிக்கது; எலும்புத் தேய்மானம் தடுப்பது.

கணனிய மூடிட்டுக் கண்ணையும் மூடிக்கிட்டா எமிலி.

ஓர் உணவின் துணைப் பொருட்களில் இத்தனை மருத்துவ குணங்களா?



"இந்தியாவே உனக்கு வணக்கம்"

சிட்டம்மாவுக்கும் அவ சமையல் கட்டுக்கும் நல்ல வளஞ்சு நம்ம ஊருக் கும்புடு ஒண்ணு போட்டா.

☆☆☆☆☆☆

சாப்பிட்டு முடிச்சாச்சு. நல்லா இருட்டிருச்சு.

"போகலாமா பல்கலைக்கழக விருந்தினர் விடுதிக்கு?" என்றான் சின்னப்பாண்டி.

"இல்லை எங்களுக்கு வேறு திட்டம் இருக்கிறது"

"என்ன?"

"இந்த இரவு உங்கள் வீட்டில் தங்குவதாகத் திட்டம்"

அதிர்ச்சியில் ஆடிப்போயிட்டான் சின்னப்பாண்டி.

> **பாடம்**
>
> அஸ்தமனம் என்றார்கள்
> ஆந்தைகள் மகிழ்ந்தன
> நட்சத்திரங்கள் கும்மி
> கொட்டிக் கொண்டாடின
> தான் சாகவில்லை என்பதை
> நிலவுக்கு ஒளியூட்டி
> நிரூபித்தது சூரியன்
> சூரியன் சொன்னது:
> "மறைந்தும் மறையாதிருக்க
> உன் சுவடுகளை விட்டுச் செல்"
>
> -வைரமுத்து-



"வேண்டாம் இந்த விளையாட்டு. உங்களுக்கு அவஸ்தை" என்றான் சின்னப்பாண்டி.

"அனுபவம்" என்றான் இஷி.

"உங்களுக்குத் தூக்கம் வராது. விடிய விடிய விழித்திருக்க வேண்டும்" என்றான் சின்னப்பாண்டி.

"ஆனந்தம்" என்றாள் எமிலி.

பிடிவாதம் செயிச்சிருச்சு.

பழகாத ஒரு ராத்திரிக்குள்ள படுக்கப் போறாக ஒரு அமெரிக்காக்காரப் பிள்ளையும், ஜப்பான்காரப் பயலும்.

☆☆☆☆☆☆

இரவு இனியது.
உயிர்களின் தொட்டில் அது;
உறக்கத்தின் தாய்வீடு.
பகல் என்பது யுத்தம்;
இரவு சமாதானம்.

வருடத்தின் பாதி மட்டுமல்ல இரவு;வாழ்வின் பாதி.

இரவை நேசிக்கிறவன் கவிஞனாகிறான்; உணர்கிறவன் ஞானியாகிறான்.

ஆனால், என்ன ஒரு சாபக்கேடு தெரியுமா? உலகில் உள்ள பல்லுயிர்களுக்கும் இறந்துபோன இரவுகளே சொந்தம். உயிருள்ள இரவென்பது ஒன்றோ இரண்டோ மூன்றோ?

இஷிக்கும் எமிலிக்கும் அது உயிர்ப்புள்ள இரவு; அந்தநாள் வரை அறியாத இரவு. நட்சத்திரங்களிலிருந்து பூமிக்கு வரும் நற்சேதியை உள்வாங்கிக் கொள்ளப் புலன்கள் ஐந்தையும் விழிக்க வைத்திருந்த வெள்ளை இரவு.

'இங்கேதான் இரவு தங்கப்போகிறோம்' என்று எமிலியும் இஷிமுராவும் சொன்னதும் துணுக்குற்றார் கருத்தமாயி; படபடப்பானாள் சிட்டம்மா.

"எலிவலைக்குள்ள கிளி வந்து தங்குற கேலிக் கூத்தாவில்ல இருக்கு! பெருமையாத்தான் இருக்கு. இல்லேங்கல. ஆனா இத்த பாயும் தொத்தத் தலகாணியும் பீத்தப் போர்வையும் ஆளுக்கொண்ணுன்னு இருக்கிற வீட்டுல, இந்தத் தங்கக் கொழுந்துகளத் தங்க வைக்கிற பருவத்திலயா நாங்க இருக்கோம்? விருந்து போட்டு வெத்தலகொடுக்க வேண்டிய ராசா வீட்டுக் கன்னுக் குட்டிகளுக்கு வெத்தல மேல விருந்து வைக்கிற கதையாவில்ல போச்சு. சரி ஆனது ஆகட்டும் பாப்போம்"

வீட்டுக்குள் கிடக்கும் கட்டில் ஒரு விருந்தினர் படுக்கும் தரத்தில் இல்லை. கயிறுகள் சரிந்து சரிந்து நான்கு சட்டங்களில் கட்டப்பட்ட தொட்டில் மாதிரி தொங்கிக் கிடந்தது அது. மாடு கட்டும் கொட்டத்துக்கு இடம் மாறப்பட்டது கட்டில். பசுமாட்டுக்குப் பக்கத்தில் கட்டில் போட்டுப் படுத்துக் கொண்டார் கருத்தமாயி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய செயலாளர் பாராளுமன்றுக்கு விஜயம்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா நேற்று முன்தினம் பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் தூதுக்குழுவுடன் பாராளுமன்றத்திற்கு வருகை தந்த கமலேஸ்சர்மாவை சபாநாயகர் சமல்ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

கமலேஸ் சர்மா, பாராளுமன்றத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள முன்னாள் சபாநாயகர்கள், எம்.பிக்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் புகைப்படங்களை பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து சபா மண்டபத்தை பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டார். பாராளுமன்றத்தின் சபையை பார்வையிட்டதுடன் இங்கு பாராளுமன்ற நடைமுறைகளில் சிலவற்றையும் கேட்டறிந்து கொண்டார். சபாநாயகர், பிரதி சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் இங்கு விளக்கமளித்தனர்.

இதனையடுத்து 2 ஆவது மாடியிலுள்ள சபாநாயகரின் அறையில் இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணி, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் நிச்சயமாக பங்கேற்பார் என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஸ் சர்மா தெரிவித்ததாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இருவருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவியாக இரண்டாம் எலிசபெத் மகாராணி கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கண்டியில் விழுந்தது விண்கல்



கண்டி, அலதெனிய பிரதேசத்தில் விண்கல் போன்ற மர்மப் பொருளொன்று வானிலிருந்து விழுந்துள்ளது.

சுமார் ஐந்து கிலோ நிறையுடைய இந்த விண்கல், குறித்த பிரதேசத்திலுள்ள கற்குழியொன்றில் நேற்றுமுன்தினம் விழுந்ததாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விண்கல் தொடர்பான ஆராய்ச்சிகள் தற்போது உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-2)

# நவநீதம்பிள்ளையின் அறிக்கை வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிப்பு

இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பிலான விசாரணைகள் அடங்கிய விவாதம் எதிர்வரும் மார்ச் மாதம் 11,12 ஆம் திகதிகளில் ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டங்களில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த விவாதம் தொடர்பான மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை ஜெனீவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜெனீவா உயர்மட்டத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதவிர இலங்கை தொடர்பான மனிதவுரிமைகள் மீளாய்வு அறிக்கை குறித்த விவாதம் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீளாய்வு அறிக்கையின் 99 பரிந்துரைகளை நிராகரிப்பதாக இலங்கை அரசு ஏற்கனவே மனிதவுரிமைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளது.

இந்த பரிந்துரைகளில் பிரதானமானது சர்வதேச நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.(அ-2)

# திருமலையில் தமது எரிபொருள் குதங்களை கையேற்க அரசு முயற்சி

## எல்ஜஓசி நிறுவனம் அவதானம்!

(திருகோணமலை)

திருகோணமலையில அமைந்துள்ள தமது எண்ணெய் குதங்களை இலங்கை அரசாங்கம் கையேற்கும் செய்தி குறித்து தாம் அவதானம் செலுத்தியுள்ளதாக எல்ஜஓசி என்ற இந்திய எரிபொருள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எவ்வித அறிவித்தல்களும் தமக்கு கிடைக்கவில்லை.

எனினும் சிலர் தமது எரிபொருள் குதங்களை அரசாங்கம் கையேற்கப் போவதாக செய்தியை வெளியிட்டுள்ளதாக எல்ஜஓசியின் இலங்கை முகாமைப் பணிப்பாளர் சுபாத் டிக்வாலே தெரிவித்துள்ளார்.

எனது வீட்டில் இருந்து தளபாடங்களை யாராவது எடுக்க முயற்சிக்கிறார்கள் என்று யாராவது கூறினால் என்ன யோசிக்கத் தோன்றும் என்று டிக்வாலே கேள்வி எழுப்பியுள்ளார்.

எல்ஜஓசி நிறுவனம் இலங்கையில் 2003 ஆம் ஆண்டில் இருந்து தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் தரம் குறைந்த 5 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் தமது நிறுவனம் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் டிக்வாலே குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க தீர்மானம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தீர்மானத்தை செல்லுபடியற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணைக்கோர் மனுத்தொடர்பில் தலையிடுமாறு சட்டத்தரணி சுமுது காந்தா மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அங்கத்தவர்கள் 11 பேர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோரே மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-2)

# ஜெனீவா விவகாரத்தினாலேயே நாணய நிதியம் கடன் வழங்கவில்லை


## முன்னாள் எம்.பி.பிமல் தெரிவிப்பு

(பத்தரமுல்ல)

ஜெனீவா விவகாரம் காரணமாக இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்க விரும்பவில்லை. அதுதான் உண்மை நிலையாகும் என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற சோசலிச இளைஞர் முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்திடம் தாம் கடன் வாங்க மாட்டோமென இலங்கை அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், இது உண்மையல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை மீதான மனித உரிமை விவகாரம் காரணமாகவே சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்கவில்லை என்பதே உண்மையான நிலைப்பாடாகத் தெரிகிறது என்றார். (அ-2)



இலங்கை பிரதம சாரணிய ஆணையாளர் பேராசிரியர் ரி.கே.என்.டி. சில்வா தலைமையிலான குழுவினர் கடந்த 10 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம். (படம்:– என்.குமார்)

# ஜனவரி மாதத்தில் 2 800 பேர் போதையில் வாகனம் செலுத்தினர்

## போக்குவரத்து ஆணைக்குழுவில் முறைப்பாடு

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 74 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

குடிபோதையில் வாகனம் செலுத்துதல், விபத்து ஏற்படுத்துதல் தொடர்பில் சாரதிகளுக்கு புள்ளிகள் வழங்கும் திட்டம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அறிமுகமாக்கப்பட்டுள்ளது.

கிடைத்துள்ள தகவல்படி அதிகளவாக மேல் மாகாணத்தில் 23 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இதைவிட வடக்கில் 10, வட மத்திய 9, கிழக்கில் 8, வடமேல் 8, தெற்கு 7, மத்திய 6 மற்றும் சப்ரகமுவவில் 5 என்று விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் குடிபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 2 ஆயிரத்து 800 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதில் ஆயிரத்து 411 முறைப்பாடுகள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதென மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-2)

# முஸ்லிம்களுக்கு எதிராக நாம் செயற்படவில்லை

## பொதுபலசேன அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற இனவாத செயற்பாடுகளுக்கு தாம் பொறுப்பல்ல என்று பொதுபலசேன அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் பொதுபலசேன பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது பொதுபலசேன அமைப்பின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக் காலமாக பொதுபலசேன அமைப்பினர் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பிலேயே குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது முஸ்லிம்கள் தொடர்பில் பொதுபலசேன அமைப்பு முன்வைத்து வரும் பல குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கப்பட்டது. எனினும் அவர்களின் நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளனர் என முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு எதிராக நாங்கள் ஒருபோதும் செயற்படவில்லை. அத்துடன் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத செயற்பாடுகளை ஒரு போதும் நாங்கள் மேற்கொள்ளவில்லை என மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இவ்வாறான கலந்துரையாடலை தொடர்ச்சியாக மேற்கொள்ளவும் இதன் ஊடாக பல பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு காண முடியும் என்றும் இந்த சந்திப்பின் போது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களுக்கு சித்திரவதை

## த கார்டியன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து தாம் நாடு கடத்தப்பட்ட பின்னர் இலங்கையில் சித்திரவதைகளுக்கும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டதாக 15 இலங்கையர்கள் முறையிட்டுள்ளதாக த கார்டியன் எனும் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு பிரித்தானியாவில் இருந்து பலவந்தமாக இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்ட 15 இலங்கையர்கள் பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக சட்டத்தரணி ஒருவரை மேற்கோள் காட்டி கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, லண்டனில் தற்போது வசிக்கும் 40 வயதான பெண் ஒருவர் தம்மை இலங்கைப் படையினர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக பிரித்தானிய எல்லைப் பாதுகாப்பு பிரிவிடம் தெரிவித்துள்ளார்.

காணாமல் போன தமது இரண்டு மகன்மாரின் விபரங்களை கோரிய போதே தமக்கு இந்தக் கதி நேர்ந்ததாக குறித்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்தே தாம் லண்டனுக்கு தப்பி வந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நாடு கடத்தப்படும் இலங்கையர்களின் விடயம் தொடர்பில் பிரித்தானிய எல்லைப் பாதுகாப்பு பிரிவு உரிய கரிசனையை காட்ட வேண்டும் என்று த கார்டியன் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# இருளற்ற இலங்கையே எமது இலக்கு-நாமல் எம்.பி.

(கொழும்பு)

இருளில்லாத இலங்கையை உருவாக்குவதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இலக்காகும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்திலுள்ள முழங்காவில் பகுதிக்கு நேற்று முன்தினம் காலை முதற் தடவையாக மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்த மின்விநியோகத்திட்டம் இன்று மக்களுக்காக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இது இந்த அரசாங்கத்தின் பாரபட்சமற்ற முறையில் எல்லா இடத்துக்கும் விரைவான அபிவிருத்தியும் முன்னேற்றமும் ஏற்படுத்தும் திட்டத்தின் நடவடிக்கைக்கு சான்றாகும்.

மன்னார்- யாழ்ப்பாணம் வீதியில் கேந்திர முக்கியத்துவம் மிக்க விவசாய பிரதேசமான முழங்காவில் பிரதேசத்துக்கு இந்த மின்சார விநியோகம் பல நன்மைகளை தரவுள்ளது.

பின்தங்கிய பிரததேசமாக கணிப்பிடப்பட்ட முழங்காவில் தற்போது பிரதான வீதியினாலும் மின்னிணைப்பின் மூலமும் விரைவான அபிவிருத்தியில் இணைக்கப்பட்டு அபிவிருத்தியடைந்த பிரதேசமாக மாறியுள்ளது என்றார். (அ-2)

# த.பே.கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டது

## போ.வ.ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சர் சி.பி. ரத்நாயக்காவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பல சுற்று கலந்துரையாடல்களைத் தொடர்ந்தே தேசிய போக்குவரத்து ஆணையகம் இத்தீர்மானத்திற்கு வந்துள்ளது.

பேருந்து போக்குவரத்து செலவு குறைந்து குறைந்த வீதத்தினாலேயே உயர்ந்துள்ளதால் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை எழவில்லையென தேசிய போக்குவரத்து அதிகாரசபைத்தலைவர் ரொகான் குணவர்தன தெரிவித்தார்.

இறுதியாக தனியார் பேருந்து கட்டணங்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டது. மீண்டும் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் பேருந்து கட்டணத்தை அதிகரிக்குமாறு பேருந்து சங்கங்கள் கோரியிருந்தன. அகற்கான காலக்கெடுவையும் விதித்திருந்தது.

2012 ஏப்ரல் 14 முதல் இன்று வரையான ஒருவருட காலத்தில் பேருந்து போக்குவரத்து செலவுகள் சிறு வீதத்தினாலே உயர்ந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி உதிரிப்பாக விலைகள், எரிபொருள் விலை அடங்கலான சகல நிலைமைகளும் இதன்போது கவனத்திற் கொள்ளப்பட்டது.

பேருந்து கட்டணம் தொடர்பான தேசிய கொள்கைப்படி ஜூலை முதலாம் திகதி முதலே பேருந்து கட்டணங்கள் திருத்தப்படவேண்டும். எதிர்வரும் காலத்தில் டீசல் விலை கூடுதலாக உயர்ந்தால் மாத்திரம் அமைச்சரவை அனுமதியுடன் பேருந்து கட்டணம் உயர்த்தப்படுமெனவும் அவர் கூறினார். (அ-2)

# 2013.02 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1349 - பிரான்ஸின் ஸ்ட்ராஸ்பூர்க் நகரில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் யூதர்கள் கொல்லப்பட்டனர்.

★1779 - ஹவாயில் ஆதிவாசிகளால் கப்டன் ஜேம்ஸ்குக் கொல்லப்பட்டான்.

★1804 - ஒட்டோமான் பேரரசுக்கு எதிரான சேர்பியர்களின் முதலாவது எழுச்சி கரஜோட்ஜே என்பவனின் தலைமையில் இடம்பெற்றது.

★1876 - எலீஷா கிறே மற்றும் அலெக் சாண்டர் கிரகம்பெல் இருவரும் வேறு வேறாக தொலைபேசிக்கான காப்புரிமம் பெற விண்ணப்பித்தனர்.

★1879 - சிலியின் இராணுவப்படைகள் பொலிவியாவின் அன்டோபகாஸ்டா நகரைக் கைப்பற்றின.

★1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவில் ஒரேஞ்ச் மாநிலத்தை 20ஆயிரம் பிரித்தானியப் படைகள் ஆக்கிரமித்தன.

★1918 - சோவியத் ஒன்றியம் கிரகோரியின் நாட்காட்டியை ஏற்றுக் கொண்டது (பழைய ஜூலியன் நாட்காட்டியின் படி பெப்ரவரி 1)

★1919 - போலந்து-சோவியத் போர் ஆரம்பமானது.

★1924 - ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்டது.

★1927 - யூகொஸ்லாவியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 700 பேர் இறந்தனர்.

★1929 - சிக்காக்கோவில் வலன்டைன் நாளன்று "அல் காப்போன்" என்பவனின் எதிராளிகள் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

★1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பசிர் பஞ்சாங்க் என்ற இடத்தில் ஜப்பானியர்களின் தாக்குதல் ஆரம்பித்தது.

★1946- ENIAC என்ற முதல் தலைமுறைக் கணனி அறிமுகமானது.

★1956 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.

★1961 - 103ஆவது தனிமம் லோரென்சியம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

★1966 - அவுஸ்திரேலியாவில் முன்னர் பாவனையில் இருந்த அவுஸ்திரேலிய பவுணுக்குப் பதிலாக அவுஸ்திரேலிய டொலர் அறிமுகப்படுத்தப்பட்டது.

★1979 - ஆப்கானிஸ்தானுக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் அடொல்ஃப் டப்ஸ் காபூலில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் பொலிஸாருக்கும் கடத்தல்காரருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அகப்பட்டு இறந்தார்.

★1981- டப்ளினில் இரவு விடுதியொன்றில் இடம்பெற்ற தீயில் 48 பேர் பலியாகினர்.

★1989-ஜிபிஎஸ் திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது விண்ணில் ஏவப்பட்டது.

★1989-யூனியன் கார்பைட் நிறுவனம் 1984 போபால் அழிவிற்காக இந்திய அரசிற்கு 470 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டஈடாக வழங்க சம்மதித்தது.

★1989-சாத்தானின் கவிதைகள் நூலை எழுதியதற்காக சல்மான் ருஷ்டிக்கு ஈரான் தலைவர்கள் ருஹொல்லா கொமெய்னி மரண தண்டனை விதித்தார்.

★1990-பெங்களூரில் இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 92 பேர் பலியானதோடு 54 பேர் காயமடைந்தனர்.

★1998 - கோயம்புத்தூர் நகரின் பல இடங்களில் குண்டுகள் வெடித்ததில் 58 பேர் பலியாகியதோடு 250 பேர் காயமுற்றனர்.

★2000 - நியர் ஷூமேக்கர் என்ற விண்கலம் 433 ஈரோஸ் என்ற சிறுகோளின் சுற்றுவட்டத்துள் பிரவேசித்தது. சிறுகோள் ஒன்றின் சுற்றுக்குள் சென்ற முதலாவது விண்கலம் இதுவாகும்.

★2005 - லெபனானின் முன்னாள் பிரதமர் ரஃபீக் ஹரீரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

★2005 - பிலிப்பைன்ஸில் மணிலா நகரில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 7 பேர் பலியாகியதுடன் 151 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

★1483 - ஸாகிருதீன் பாபர், முகலாயப் பேரரசர் (இ.1530)

★1869 - சார்ல்ஸ் வில்சன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (இ.1959)

★1917 - ஹேர்பேர்ட் ஹோப்ட்மன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க கணிதவியலாளர்

### இறப்புகள்

★1779 - ஜேம்ஸ் குக், பிரித்தானிய கப்பற் தளபதி, நாடுகாண்பயணி (பி.1728)

★1968 -அ.ந.கந்தசாமி, ஈழத்து எழுத்தாளர் (பி.1924)

★1968-கே.மயூரதாசன், ஈழத்து எழுத்தாளர் (பி.1924)

**அ.ந.கந்தசாமி**



அ.ந.கந்தசாமி 1924 ஆம் ஆண்டு ஒகட்ஸ் மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார்.

இவரது தந்தை நடராஜா. சிறைச்சாலையில் மருத்துவ அதிகாரியாக விளங்கியவர். தாய் பெயர் கௌரியம்மா. இவரிற்கு 5 வயதான போது தந்தை இறந்து விட்டார். தாயும் தந்தை இறந்து 41 ஆம் நாள் இறந்து விட்டார். தொடக்கக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்ற அ.ந.க.சிறிதுகாலம் அளவெட்டி சென்று உறவினர் சிலருடன் வாழ்ந்து வந்தார். அளவெட்டியிலிருந்த காலத்தில் அ.ந.க.தனது கல்வியினைத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தொடந்தார். பின்னர் மீண்டும் யாழ். இந்துக் கல்லூரியில் க.பொ.த. (சா/த) கல்வி கற்று பின்னர் கொழும்பு சென்றார்.

அ.ந.க.பதினான்கு வயது முதலே எழுதத் தொடங்கி விட்டார். மறுமலர்ச்சிக் குழுவின் உருவாக்கத்துக்கு காரணமானவர்களில் இவரும் ஒருவர். மற்றும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்துக்கும் முக்கியமானவர்களில் இவரும் ஒருவராக திகழ்கிறார்.

சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், மொழிபெயர்ப்பு, திறனாய்வு, உளவியல், சிறுவர் இலக்கியம் என இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் காத்திரமான பங்களிப்புச் செய்தவர். இவர் ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை வாய்ந்தவர். 1943 இலிருந்து 1953 வரை இலங்கைத் தகவல் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார். அச்சமயம் தகவற்றுறையினால் வெளியிடப்பட்ட ஸ்ரீலங்கா இதழாசிரியராகவும் விளங்கினார். அதன் பின்னர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் முழுநேர ஊழியராகப் பணியாற்றினார்.

பின்னர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக விளங்கிய அ.ந.க. தேசாபிமானி இதழில் தொடக்ககால ஆசிரியர்களில் ஒருவராகவும் அக்கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர் சுதந்திரன் இதழில் சேர்ந்து அதன் ஆசிரியாகவும் சிறிது காலம் பணியாற்றினார். அச்சமயம் பெருமளவு திருக்குறள் பற்றிய ஆங்கில ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.

ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் முன்னோடி எனப் போற்றப்பட்டு கவீந்திரன், பண்டிதர் திருமலைராயர், கலையரசன், சிப்பி, புரூனே என்னும் புனைப்பெயர்களிலும் பல இலக்கியப்படைப்புக்களை தந்த இவர் 1968 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி உடல்விட்டு தமிழோடு உயிர் கலந்தார்.

அ.ந.க.தனது இறுதிக் காலத்தில் களனி வெள்ளம் என்னுமொரு புதினத்தையும் தோட்டத் தொழிலாளர்களை மையமாக வைத்து எழுதிக் கொண்டிருந்தார். அவர் இறந்ததும் எழுத்தாளர் செ.கணேசலிங்கனிடம் இருந்த அந்த ஆவணம் 1983 கலவரத்தில் எரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக சமூகத்துடன் இணைந்து இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை கிடையாது என அண்மையில் இலங்கை ஜனாதிபதி தனது சுதந்திரதின உரையில் குறிப்பிட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஜனாதிபதி தனது இந்தியப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என முன்னர் இலங்கை



ஜனாதிபதி வாக்குறுதி அளித்த போதிலும்கூட கடந்த திங்களன்று இலங்கையில் இடம்பெற்ற இதன் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனங்களின் அடிப்படையில் வெவ்வேறு நிர்வாகங்களை உருவாக்குவதானது நடைமுறையில் சாத்தியமற்றது என குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது ஜனாதிபதி ராஜபக்ஷவினதும் நாட்டில் முக்கிய பொறுப்புகளில் உள்ள அரசின் சகோதரர்களதும் உண்மையான மன உணர்வை பிரதிபலித்துக் காட்டுவதாக அனைத்துலக நெருக்கடிகள் அமைப்பின் இலங்கைக்கான திட்ட இயக்குநரும் மூத்த ஆய்வாளருமான அலன்கீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.


மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான பாதுகாப்புச் செயலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இருவரும் தற்போது இலங்கை அரசு குறிப்பிட்டது போன்று தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை கிடையாது என முன்னர் தெரிவித்ததாக அலன்கீனன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் பிரதேசங்களுக்கு மேலும் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் அல்லது அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதை விடுத்து மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் உண்மையில் குறைக்கப்பட வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும் என ஏற்கனவே தெரிவித்துள்ளார் என அலன்கீனன் மேலும் விளக்கியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய உலக நாடுகளுக்கு இலங்கை ஜனாதிபதி உள்ளடங்கலாக அவரது சகோதரர்கள் தாம் கடந்த காலங்களில் வழங்கிய தமிழ் மக்கள் தொடர்பான வாக்குறுதிகளை மறந்து செயற்படுவதாகவும் அலன்கீனன் கூறுகிறார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் குருதி தோய்ந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதி நிலைமையை சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதுடன் நாட்டில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை இனங்களை ஓரங்கட்டி சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கு துணை போவதாக கீனன் குற்றம் சுமத்தியுள்ளார். இதனால் நாட்டில் இனக் குழப்பங்கள் மட்டுமே அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.







இலங்கையானது சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்தியலை தற்போதைய அரசாங்கம் விதைத்துள்ளது. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களின் பெருந்தன்மையின் விளைவாக இலங்கையில் வாழ்கின்றார்களேயன்றி இவர்கள் சிங்கள சமூகத்திற்கு சமமாக [illegible] கொண்டிருக்க[illegible] யின் தற்போதைய அரசாங்கம் கூறி வருகிறது. இலங்கையில் வாழும் ஏனைய மக்களைப்போலவே தமிழர்களும் சம உரிமையைக் கொண்டுள்ள அதேவேளையில் தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்ற பொய்யான கருத்தை அவர்கள் பரப்பி வருகின்றனர் எனவும் அனைத்துலக நெருக்கடிகள் அமைப்பைச் சேர்ந்த அலன்கீனன் தெரிவிக்கிறார்.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையின் அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு தமிழ்மொழி உத்தியோகபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். முஸ்லிம் கட்சிகள் உள்ளடங்கலான சில கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டது போன்று மாகாணங்களுக்கான அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதில் ஆர்வங்கொண்டுள்ள போதிலும், இலங்கை ஜனாதிபதி தான் ஏற்கனவே இது தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை மீறி செயற்படுகிறார்கள் எனவும் இலங்கை ஜனாதிபதி தான் விரும்புவதை அடைந்து கொள்ளும் விதமாகவே கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் அரசியல் இடம்பெற்று வருகிறது என கீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளையில், 13 ஆவது திருத்தச் சட்டம் கூட போதியளவு அதிகாரங்களை வழங்கவில்லை. மாகாணங்களுக்கு மிக மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே இச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட முடியும். இச்சட்டமானது தமிழ் மக்களின் அரசியல் அவாக்களையும் அவர்களது கோரிக்கைகளையும் விருப்பங்களையும் எதிர்பார்ப்புக்களையும் திருப்திப்படுத்தாது எனவும் கீனன் மேலும் விளக்கியுள்ளார்.

ஓரங்கட்டுதல் மூலம் எழக்கூடிய பிரச்சினை மற்றும் சுயாட்சி அதிகாரம் என்பவற்றை உண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்து கொண்டால் மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வானது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதை பெரும்பான்மை சிங்கள மக்களையாவது நம்ப வைக்க முடியும் என இலங்கையின் முன்னாள் [illegible] சந்திரிகா குமாரதுங்க [illegible]தாக கீனன் மீளவும் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கை ஜனாதிபதி சிறுபான்மை தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வங்கொண்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும் என்பதே ஆய்வாளரின் நிலைப்பாடு.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் விடயத்தில மஹிந்த ராஜபக்ஷ அரசின் மீது வெளித்தரப்பினர் அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆனால், இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள இந்தியாவோ அல்லது ஏனைய அனைத்துலக சமூகமோ இந்த விடயத்தில் இலங்கை மீது போதியளவு அழுத்தத்தை வழங்கவில்லை. வெளித்தரப்பினர் அழுத்தம் கொடுக்கும்போதே இலங்கையில் மாற்றம் ஏற்படுவது சாத்தியமாகும் என்றே கீனன் நம்புகிறார்.

இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பில் இந்தியா உவகை அடையவில்லை. எனினும் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில், வெளித்தரப்பின் அழுத்தத்தை ஏற்படுத்துவதில் இந்தியா விருப்பங்கொண்டிருக்கவில்லை. இந்தியாவானது பூகோள ரீதியாக மட்டுமன்றி தென்னிந்தியாவில் வாழும் கணிசமானளவு தமிழ் மக்களின் நிலைப்பாட்டையும் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் இலங்கை விடயத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளது. இந்தியா இலங்கைக்கு அதிக அழுத்தத்தை கொடுத்தால் அது மேலும் சீனாவின் ஆதரவை எதிர்பார்க்கும் என இந்தியா நம்புகிறது.

இலங்கை விடயத்தில் இந்தியா சில நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தாலும்கூட அனைத்துலக சமூகத்துடன் இணைந்து இலங்கை அரசு மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும். அதிகாரப் பகிர்வு, தமிழ் மக்கள் சமமாக நடத்தப்படுதல் போன்ற விடயங்களில் மட்டும் அழுத்தம் கொடுக்காது மனித உரிமை, சட்ட ஆட்சி, அதிகாரப் பிரிவினை, ஜனநாயக ஆட்சி போன்றவை இலங்கையில் பலம்பெறுவதற்கான அழுத்தத்தை அனைத்துலக சமூகத்துடன் இணைந்து இந்தியா வழங்க வேண்டும் என கீனன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆய்வாளர் அலன்கீனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2013 - 13.03.2013



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதி-ரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**குடும்பப் பிரச்சினைகள் தீர குலதெய்வ வழிபாடு தேவை!**

**எது நடந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் மிதுன இராசி நேயர்களே!**

இந்த மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது சந்திர பலம் கூடுதலாக இருந்தே மாதம் தொடங்குகிறது. எனவே, வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி கூடும். இராசிநாதன் புதன் சகாய ஸ்தானாதிபதியுடன் இணைந்து சஞ்சரித்துத் தொடங்கும் இந்த மாதத்தில் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறி இதயத்தை மகிழ்விக்கப் போகிறது. பொன்னும் பொருளும் வாங்கும் வாய்ப்பும் வந்து சேரப் போகிறது.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் விபரீத இராஜயோகத்தை உருவாக்கப் போவ தால் திட்டமிடாது செய்கிற காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

உச்ச சனியின் ஆதிக்கம் ஒருபுறம் நன்மைகளை வரவழைத்துக் கொடுக்கும். பூர்வீக சொத்துத் தகராறுகளை அகற்றும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் மறையும். பங்காளிப் பகை மாறும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதை முன்னிட்டு விலகிச்சென்ற சொந்தங்கள்கூட விரும்பி வந்து சேரலாம்.

அதேநேரத்தில் இம்மாதத்தின் கடைசிப் பகுதியில் செவ்வாய் மீனத்துக்கு பெயர்ச்சியாகிச் சென்று புத்திர ஸ்தானத்தில் உள்ள சனியைப் பார்க்கப்போகிறார். இந்த செவ்வாய், சனியின் பார்வை அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வெளியில் தங்கி படிக்கும் பிள்ளைகளின் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உருவாகலாம்.

கேதுவின் பார்வையும் உங்கள் இராசியின் மீது பதிவதால் தொழில் ரீதியாக ஒரு சிலருக்கு கடன் வாங்கும் சூழ்நிலையும் உருவாகும். எனவே, சுய ஜாதகத்தினை பார்த்து பாக்கிய ஸ்தானம் பலம்பெறும் வகையில் பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

**கும்பச் சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். பஞ்சம ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். கல்யாண கனவுகளை நனவாக்கும் விதத்தில் குழந்தைகளுக்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். வீடு வாங்கும் முயற்சி, வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும். புத,சுக்கிர, சூரிய சேர்க்கை ஏற்படும் இந்த நேரத்தில் பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த புதிய முயற்சிகளிலும் வெற்றி கிட்டும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 2 ஆம் திகதி மீன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். தொழில் ஸ்தானத்தில் 6,11 இற்கு அதிபதியான செவ்வாய் சஞ்சரிக்கும் அந்த நேரத்தில் தொடங்கும் தொழிலுக்காக அரசு வழியில் கடன் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். வெளிநாட்டிலிருந்து அனுகூல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தனித்து இயங்க முற்படுவர்.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

இக்காலம்தான் நீங்கள் எதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலம். தொட்ட காரியங்கள் வெற்றி பெறவும், தொகை வரவில் உள்ள தடை அகலவும் கட்டளையிடும் பணியாளர்கள் மனக்கசப்போடு விலகாமல் இருக்கவும் அங்காரகன் மற்றும் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. விரயங்கள் கூடும் நேரம் இது. பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பெற்றோர்களின் மேற்பார்வை கூடுதலாக இருப்பது நல்லது.

இம்மாதம் ஆஞ்சநேயர் வழிபாடு ஆனந்தம் வழங்கும். இம்மாதம் எதையும் தீர்க்கமாக முடிவெடுக்க இயலாது. குடும்ப சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் விழிப்புணர்ச்சி தேவை. கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகள் தன்னிச்சையாக முடிவெடுத்து உங்களுக்கு மனக் கவலையை உருவாக்கலாம். குடும்ப பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்வதன் மூலம் உறவினர் பகை உருவாகலாம். நவக்கிரக பரிகாரம் மற்றும் சர்ப்ப சாந்தி செய்வதும் நல்லது.

### திருப்திகரமான வாழ்க்கை அமையும் வளர்ச்சி கூடும் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறி மனம் மகிழப்போகிறீர்கள்

## சிவல்புரி சிங்காரம்

## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**யோசித்து செய்வதன் மூலம் யோகங்கள் ஏற்படும்!**

**பிறரால் செய்ய முடியாத காரியங்களைக்கூட எளிதில் செய்து முடித்து பிறர் போற்றும்படியான வாழ்க்கை நடத்தும் கடக இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் 3 கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. அத்தோடு பெப்ரவரி 22 ஆம் திகதி சுக்கிரனும் இணையப்போகிறார். 8 ஆம் இடத்தில் இத்தனை கிரகங்கள் இணைவது அவ்வளவு நல்லதல்ல.

குறிப்பாக ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டு வைத்திய செலவுகளை உருவாக்கும். அலைச்சல்கள் அதிகரிக்கும். ஆதாயம் வரும் என்று நினைத்து செயற்பட்ட காரியத்தில் இலாபம் குறைவாகவே வந்து சேரும். அரசு வழி தொல்லைகளும் உடன்பிறப்புகளின் உபத்திரவங்களும் கூடி மன நிம்மதியை கெடுக்கலாம். தெய்வ சிந்தனையோடு செயற்படும் காரியங்களில் மட்டுமே சிறப்பான வெற்றியை காண முடியும்.

அர்த்தாஷ்டம சனீயும் அர்த்தாஷ்டம ராகுவும் செயற்படும் இந்த நேரத்தில் வாகனங்களில் செல்லும் பொழுது விழிப்புணர்ச்சி தேவை. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும்.

பொதுவாகவே அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கத்தில் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது. உறவினர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலமும் உடனிருப்பவர்களிடம் அன்பு செலுத்துவதன் மூலமே இதுபோன்ற காலங்களில் நீங்கள் நன்மைகளை அடைய முடியும்.

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து வழிபாடுகளை மேற்கொள்வதோடு ஜோடி தீபமாக எள் தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது. மார்ச் 2 ஆம் திகதிக்கு மேல் அர்த்தாஷ்டம சனியின் மீது மீன செவ்வாயின் பார்வை பதியப்போவதால் கூடுதல் கவனத்தோடு செயற்பட்டால்தான் ஏமாற்றத்திலிருந்தும் எதிரிகளிடமிருந்தும் விடுபட இயலும்.

**கும்பச் சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். பாதகாதிபதி மறையும் நேரத்தில் பலன்கள் நன்மையாகவே இருக்கும். என்றாலும் 8 இல் உள்ள ஏனைய கிரகங்களின் ஆதிக்கம் வலுவாக இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். கூட்டாளிகள் உங்களை விட்டு விலக நேரிடலாம். பணத்தேவைகள் கடைசி நேரத்திலேயே பூர்த்தியாகும். குறிப்பாக உடன்பிறப்புகளின் வழியே ஒற்றுமைக் குறைவு ஏற்படலாம்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

எட்டில் சஞ்சரித்து வந்த செவ்வாய் மார்ச் 2 ஆம் திகதி மீன இராசிக்கு செல்கிறார். ஒரு வழிக்கு அது நன்மைதான் என்றாலும் அதன் பார்வை சுக ஸ்தானத்தில் அல்லவா பதிகிறது. எனவே, காரியங்கள் கடைசி நேரத்தில் கை கூடாமல் போகலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்புகள் மாறும். கௌரவத்தைத் தக்க வைத்துக்கொள்ள பெரும் பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

பெப்ரவரி 16 ஆம் திகதி சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 7,8 இற்கு அதிபதியான சனி வக்ரம் பெறும் பொழுது உடல் நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும். என்றாலும் குடும்பப் பிரச்சினை தலைதூக்கலாம். பயணங்களில் சில மாற்றங்களை செய்வீர்கள். மார்ச் 2 ஆம் திகதி முதல் செவ்வாய், சனி பார்வை இருப்பதால் சொந்த பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த பந்தங்களின் அரவணைப்பு குறையலாம். தொழில் மாற்ற சிந்தனைகள் மேலோங்கும்.

இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடும் முன்னேற்றம் தரும். இம்மாதம் குடும்ப சுமை கூடும். கூட்டு முயற்சிகளில் மாற்றம் செய்வீர்கள். கணவன்- மனைவிக்குள் மூன்றாம் நபரால் பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்வது நல்லது. உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவதில் தாமதம் ஏற்படும். மாதத்தின் மையப்பகுதியில் வக்ர சனியின் இயக்கத்தால் ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. எதையும் பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. ஆதியந்தபிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும். **(தொடரும்)**



### இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்; எதையும் பெரியவர்களை கலந்தாலோசித்து செய்வது நல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் தோற்றுப்போவோரும் பட்டம் பெற முடியுமா?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

02


பேராசிரியர் மா.சின்னத்தம்பி

### அறிமுகம்

பாடசாலைகள் நாட்டின் முன்னேற்றத்தில் பயன்மிக்க வகையில் பங்களிப்பு செய்யத்தக்க அறிவையும் திறன்களையும் ஊக்கம் மிக்க நேர்மனப்பாங்குகளையும் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் உன்னத இலட்சியத்துடன் செயற்பட்டு வருகின்றன. பெற்றோரால் அல்லது தொழில் நிறுவனங்களால் தனித்து நின்று செய்ய முடியாத உன்னதமான மனித வள விருத்திப் பணியில் அவை அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

பிள்ளைகள் வீதிகளில் அலையாமலும் நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படாமலும் தீமை தரும் அபாயமான தொழில் வலயங்களுள் இணைந்து விடாமலும் பிள்ளைகளை தடுத்து நிறுத்தும் உன்னதமான பணியை பாடசாலைகள் சமுதாய வரலாற்றுக் காலம் முழுவதும் செய்து வருகின்றன.

ஆரோக்கியமும் ஒழுங்கும் ஒழுக்கமும் சுய கவனமும் குடும்பப் பற்றும் உழைப்பின் மீது கவனக் குவிப்பும் பண்பாடு மிக்க தொடர்பாடல் தேர்ச்சிகளும் கொண்டவர்களாக குழந்தைகளை வளர்த்தெடுப்பதில் குடும்பங்களுடன் இணைந்து அவை பணியாற்றி வருகின்றன.

ஒரு குடும்பத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளாக வளர்பவர்களை புதிய குடும்பங்களின் பொறுப்புமிக்க குடும்பத் தலைவர்களாகவும் தேசிய உற்பத்தித்துறையின் வினைத்திறன் மிக்க உடல் மற்றும் அறிவுசார் தொழிலாளர்களாகவும் சுய தீர்மானங்களினால் சமூக மேம்பாட்டை உறுதிப்படுத்துபவர்களாகவும் மாற்றுவதில் முறைமைசார் பாடசாலைகள் துணை செய்து வருகின்றன.

எமது நாட்டில் ஒவ்வொரு வருடமும் நாற்பது இலட்சம் இளைஞர்களுக்கு கல்வியும் வாழ்வியல் பயிற்சியும் வழங்கும் பாடசாலைகள் என்ற சமுதாய மேம்பாட்டு நிறுவனங்கள் அறிவை ஏற்றுக் கொள்ளப்படும் நியமங்களுக்கமைய வழங்குகின்றன. அவற்றின் தகைமை மட்டங்களை சான்றிதழ்படுத்துகின்றன. இத்தகைய சான்றிதழ்கள் தொழில் வழங்கும் உலகத்தவரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதன்படி பல்வேறு மாதிரி தொழில் வாய்ப்புக்களையும் இளைஞர்கள் பெறுகின்றனர்.

இத்தகைய அறிவை சான்றிதழ்ப்படுத்துவதற்கான அறிவு விருத்திச் செய்முறையில் முதன்மை மிக்க பணியை பாடசாலைகள் மேற்கொள்கின்றன. பதின்மூன்று வருட கால அல்லது பதினொரு வருட கால தொடர்படிப்பை மாணவர்கள் நிறைவு செய்ய துணை செய்து தகைமையை தரமுயர்த்தி பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பி வருகின்றன. எனினும் சான்றிதழ்படுத்துதல், உயர்கல்வி நிறுவனங்களில் அவர்கள் இணைதற்கு வழிகாட்டுதல், நெறிப்படுத்துதல் தொடர்பாக பல பலவீனங்களைப் பாடசாலைகள் கொண்டுள்ளன. குறிப்பாக அரச பாடசாலை முறைமை கொண்டுள்ளது.

இவை பற்றி புதிய மாதிரியில் சிந்திப்போமா?

கண்முன்னே நிகழ்ந்து வரும் மாற்றங்களையும் புதிய வாய்ப்புக்களுக்குள் துணிவுடன் நுழையும் முறைமைகளையும் தெரிந்து கொள்வோமா? இதுபற்றி இம்முறை பேசுவோம்.

### ☆ அறிவுசார் பட்டங்களை நோக்கி...

பிரித்தானியரால் வழங்கப்பட்ட பொது நிர்வாக முறைகளையும் கல்வி ஏற்பாடுகளையும் சுதந்திரத்துக்குப் பின்னும் 65 வருடங்களாக நாம் பின்பற்றி வருகிறோம். அறிவு பெறுதல் என்பது உடல் உழைப்பை நிராகரிப்பதற்கும் கற்பிதமான தொழில் நிலை மற்றும் சமூக நிலைகளில் மேலாதிக்க வலிமையைப் பெறுதற்குமான பொறிமுறையாக நாம் நம்பி வருகிறோம். அதியுயர் அறிவு நிலையை பல்கலைக்கழக பட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. உன்னதமான பொருளாதார நலன்களையும் பிரிக்க முடியாத சமூக அந்தஸ்தையும் சமூகத்தின் மீதான அதிகார உரிமையையும் பட்டங்கள் வழங்குகின்றன. இதனால் பல்கலைக்கழகங்கள் தந்த கோபுரங்கள்; அவற்றில் போட்டி போட்டு ஏறிவிட வேண்டும் என்றெல்லாம் நாம் நம்பி வந்துள்ளோம். அந்த தந்தக் கோபுரங்களிலிருந்து பார்க்கும் போது ஏனையவையெல்லாம் மதிப்பற்றனவாக தென்படலாயின. இதனால் அவற்றின் மீது எம்து சமுதாயக் கவனம் இல்லாது போயிற்று.

சமூகத்தின் மேட்டுக்குடியினரான சிறு தொகையினர் பல்கலைக்கழகம் நுழைந்து வந்த காலத்தில் அது சாத்தியமாயிற்று. அவர்களுக்கான கண்ணியத் தொழில்களும் அப்போது நிச்சயம் கிடைத்தன. பட்டம் தொடர்பான எமது பழைய கனவுகளும் மெய்யப்பட்டன.

பட்டதாரிகள் உயர் அரச துறைகளில் முடிவுகளை மேற்கொள்வோராகவும் கைத்தொழில், வர்த்தகத் துறை களில் மேலாண்மையாளர்களாகவும் சட்டம், நீதி போன்ற துறைகளில் செயலாற்ற வினையாளர்களாகவும் அரசியல் மற்றும் சமுதாய தலைவர்களாகவும் மேம்பட்டு நின்றனர்.

இதனால் பல்கலைக்கழகங்கள் மகோன்னதமான மதிப்பை பெற்றிருந்தன.

பாடசாலைகளும் தமது மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவது மாத்திரமே தமது பொறுப்புமிக்க பணி என்று நம்பி வந்தன. அதற்கமைய போட்டித்திறன்களுடன் செயற்பட்டன. இப்போதும் செயற்படுகின்றன.

### ☆ புதிதாக விரிவடையும் நெருக்கடிகள்

1950 களில் பல்கலைக்கழகங்களுக்கும் அவற்றின் பட்டங்களுக்கும் நிலவிய பொற்காலம் மெல்ல மெல்ல மங்கிப் போயிற்று.

இருபத்தியொராம் நூற்றாண்டில் இவை தொடர்பாக பல புதிய நெருக்கடி தரும் கருமேகங்கள் உயர் கல்வி வானில் பரவத் தொடங்கின.

உயர்கல்வியை சனநாயகப்படுத்துதல், தாய்மொழியில் பட்டப்படிப்பு, அரச செலவில் முழுமையான பல்கலைக்கழக வாழ்வு; பட்டதாரிகளுக்கான தொழில்வாய்ப்புக்களிலான பன்முகப்படுத்தல்கள், பல்கலைக்கழகங்களை புவியியல் ரீதியில் பரவலாக்குதல், அறிவாற்றலுக்கு அப்பால் சமூக நீதிக்காக உயர்கல்விக் கதவுகளை அகலத் திறத்தல் போன்ற பல முற்போக்கு சிந்தனைகளும் கொள்கைகளாகின. இவை சார்ந்த நடைமுறை உபாயங்கள் விரிவடைந்தன. உயர்கல்வி நடைமுறைகளும் செயற்பாடுகள் எளிமைப்படுத்தப்பட்டன. இதனால் உயர்கல்வி என்ற காற்றுப்பை வீங்கிப் பெருத்தது. மகிழ்ச்சியும் பெருமையும் தந்து கொண்டிருந்த உயர்கல்விப் பரப்பு சவால்களையும் பொருளாதார விரயங்களையும் இளைஞர் முரண்பாடுகளையும் அச்சத்துடன் எதிர்கொள்ளலாயிற்று.

இலங்கையின் பல்கலைக்கழக கல்வி தொடர்பான நோக்குகள், போக்குகள் தொடர்பான சில நிகழ்வுகள் இங்கு தொடர்பு படுத்தப்படுவது அவசியம்.

✷ 1942 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியையும் இலங்கை மருத்துக் கல்லூரியையும் ஒன்றிணைத்து இலங்கை பல்கலைக்கழகம் உருவானது. இது ஒரேயொரு பல்கலைக்கழகமாகும். இங்கு ஆங்கில மொழியில் உயர் கல்வி போதிக்கப்பட்டது.

1945 இல் இலவசக் கல்வி அறிமுகமானதுடன் சிங்களமும் தமிழமும் கற்பித்தல் மொழிகளாயின. 1948 இல் 1611 மாணவர்களுக்கு 121 விரிவுரையாளர்கள் கற்பித்தனர். வருடாந்தம் 200 பேர் மாத்திரம் பட்டதாரிகளாக வெளியேறினர். உயர்தொழில் வாய்ப்புக்களும் எளிதாக கிடைத்தன. (சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம்:- 1998:84)

✷2007 இல் 62 வருடங்களின் பின்- 15 அரச பல்கலைக்கழகங்கள் இயங்கின. மேற்கு, தெற்கு, வடக்கு, கிழக்கு என்ற எல்லா பிரதேசங்களிலும் சமுதாய கோரிக்கைக்கு அமைவாக பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டிருந்தன. 65, 987 மாணவர்களுக்கு 4, 304 விரிவுரையாளர்கள் கற்பித்தனர். இவ்வருடம் 12, 005 பட்டதாரிகள் வெளியேறினர்.

இவர்களில் பொறியியலாளர்கள் 894 பேர், வைத்தியர்கள் 901 பேர், சட்டத்தரணிகள் 208 பேர். ஆனால், குறிப்புக்களை மையப்படுத்திய- வேலை அனுபவங்கள் ஏதுமற்ற கலைப்பட்டதாரிகள் 5, 142 பேராக இருந்தனர். இந்த மாதிரியான பட்டதாரிகளின் கலவை தான் பல்கலைக்கழக கல்வி முறையை அச்சுறுத்தும் அசுரனாக மாறியது.

இந்தப் பொருத்தக்கேடு வளரும் போதிலும் 17,196 பேரை பல்கலைக்கழக முறைமையில் சேர்த்துக் கொண்டோம். (Central Bank Annual Report- 2008:75)

✷ இந்தப்புதிய முரண்பாடுகளை அகத்தே கொண்டிருந்த பல்கலைக்கழக முறைமை மற்றும் தொழிற்பாடு பற்றி இக்காலத்தில் எச்சரிக்கையுணர்வுடன் புதிய சீர்திருத்தங்கள் பற்றிச் சிந்திக்கும்படி நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

(I) பல்கலைக்கழக கல்வியின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் (IRQUE) அறிமுகமாயிற்று.

(II)பல்கலைக்கழகங்களுக்கும் கைத்தொழில்களுக்குமான ஒத்துழைப்பு ஊக்குவிக்கப்படலாயிற்று. கைத்தொழில்துறையினரின் எதிர்பார்க்கைகளை மதித்து அதற்கேற்ப கலைத்திட்டத்தை- கற்பிக்கும் விடயங்களை மாற்ற முனைந்தோம்.

(III)பல்கலைக்கழகம்- கைத்தொழிற்றுறை- சமூகம் என்பவற்றிடையில் பிணைப்பை உருவாக்கும். அலகுகளை நிறுவுவதற்கு உயர்கல்விமானியங்கள் ஆணைக்குழு நிதி வழங்கியது.

(IV)நுண்ணிய அறிவு- பொறிகள், இயந்திரங்களுடன் இணைவது பற்றிய சிந்தனை எழுந்தது. அறிவு- தொழில்நுட்பம்- ஆராய்ச்சி சார்ந்த தொடர்புகளை வலியுறுத்த வேண்டியதாயிற்று.

தூய அறிவுக்கான உயர் கல்வி என்பதிலிருந்து உடல் திறன் சார்ந்த செயல் வினையை மையமாகக் கொண்ட தொழில்சார், தொழில்நுட்ப கல்விக்கு பல்கலைக்கழக கல்வி நகர்த்தப்படலாயிற்று. இது மரபு வழியான அறிவுசார் பல்கலைக்கழகக் கல்வி எதிர்கொண்ட சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளினால் உந்தப்பட்ட மாற்றங்களாகும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக அறிவு மைய பட்டங்களுக்கு மாணவர்களைத் தயார் செய்து வந்த பாடசாலைகள் இந்த மாற்றங்களை உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப தமது செயல்முறைகளையும் அணுகுமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாற்றங்கள் பாடசாலைகளினால் உள்வாங்கப்பட்டுள்ளனவா?

இவை பற்றிய சுவர்மையான அவதானங்களும் கொள்கை வடிவமைப்பும் உபாயங்களும் தொழிற்பாடுகளிலான மாற்றங்களும் நிகழ்கின்றனவா?

### ☆ அறிவு மேம்பாடா? தொழில்நுட்ப திறனா?

மரபு வழியான நியமங்களுக்கு அமைவாக கற்பவர்களுக்கென உருவாக்கப்பட்ட அதற்கமைவான மேசை- கதிரை மைய ஒரே தடவை மாதிரி- எழுத்துச் சோதனைகளில் வெற்றி பெறுபவர்களை மாத்திரம் இலக்கு வைத்து பாடசாலைகள் செயற்பட்டன.

கணிதம், விஞ்ஞானம் என்ற பாடங்களை கற்பதற்கான இயல் தகைமையும் விருப்பமும் அற்றவர்கள் வேறு எத்தகைய விசேட ஆற்றல்களைக் கொண்டிருந்தாலும் அவர்கள் உயர்கல்வித்தகைமை பெறுவதற்கு அருகதையற்றவர்கள். இந்த சித்தாந்த ஓடுபாதையில் எமது பாடசாலைக்கல்வி நகர்ந்து கொண்டிருந்தன.

உடல் சார்ந்த தனித்திறமைகளும் புத்தாக்க ஆற்றல்களும் கொண்டவர்களை தோற்றுப் போனவர்களாக நாம் சமூகத்துக்கு காட்டி வந்திருக்கிறோம். மாற்று வாய்ப்புக்களை இவர்களுக்காக திறந்து விடுவதில் நாம் அக்கறை காட்டவில்லை. அவர்கள் தமது திறமைகளுக்கு தொடர்பில்லாது உடல் உழைப்பாளர்களாகவும் மன விரக்தியுள்ளவர்களாகவும் சிறு குற்றவாளிகளாகவும் வளர்ப்பதற்கு கல்வியாளர்களும் கல்வி முறைமையும் பொறுப்பாளிகளாகின.

தமக்கு உடன்பாடானான முறைகளில் கல்விசார் வெற்றிகளையும் அதன் நன்மைகளையும் தனிவுரிமை ஆக்கிக் கொண்டவர்கள், ஏனைய உடல் திறன் சார்ந்தவர்கள் பட்டம் பெறவும் அங்கீகாரமும் புகழும் பெருமை மிகு சமூக வாழ்வும் பெறுவதற்கு இடமளிக்கவில்லை.

இத்தகைய அறிவுசார் அக்கறையின்மை அல்லது உணரப்படாத தகுதிச் சான்றிதழ் சார்ந்த பாரபட்சம், விரக்தியும் சமூக கோபமும் கொண்ட இளைஞர்களை உருவாக்கியது. அவர்களை பொறுப்பற்றவர்களாக மாற்றியது. ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக, பண்பாட்டு விழுமியங்களுக்கு எதிரான திசைகளில் ஆக்ரோஷத்துடன் அவர்கள் செயற்படத் தூண்டியது. கல்வி விரயங்களும் சமுதாய முரண்பாடுகளும் மனித வள இழப்புக்களும் அதிகரித்தன.

இவை சமூக அதிர்ச்சிகளை உருவாக்கியபோது நாம் விழிப்படையலானோம். இதன் வெளிப்பாடே மரபுவழியான- அறிவு மைய- தொகுதிப் பாட அடிப்படையில் அமைந்த க.பொ.த. சாதாரணம் (GCE O/L), க.பொ.த. உயர்தரம் (GCE A/L) போன்ற தகைமைகளுக்கு மேலதிகமாக தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை (National Vocational Qualification - NVQ) என்பதை தேசிய ரீதியில் அங்கீகரிக்கத் தொடங்கியிருத்தலாகும்.

பாடசாலைகளின் பொறுப்புதாரர்கள் இதனை தெளிவாக புரிந்து கொண்டு தமது நோக்கையும் தொழிற்பாடுகளையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மாற்றுச் சிந்தனைக்கான நேரம் வந்து விட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதரசம் அடங்கிய வெப்பமானி மற்றும் இரத்த அழுத்தமானிகளை அகற்ற முடிவு

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு)—— நாடெங்கிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் பாவனையில் இருக்கும் பாதரசம் அடங்கிய வெப்பமானி மற்றும் இரத்த அழுத்தமானி சகலதையும் அப்புறப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. பாதரசம் சுற்றாடலில் சேரும் போது மிக மோசமான சுற்றாடல் மற்றும் ஆரோக்கிய பிரச்சினைகள் ஏற்படுவதால் பாதரசம் அடங்கிய சகல உபகரணங்களையும் பாவனையிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு முழு உலகிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

அதன் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கையை இங்கும் முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இத்தீர்மானத்திற்கமைய பாதரசம் அடங்கிய வெப்பமானியும் இரத்த அழுத்தமானியும் அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து கட்டம் கட்டமாக அப்புறப்படுத்தப்படும்.

இந் நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யும் வகையில் விசேட சுற்றறிக்கையொன்றை சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக சகல மாகாண செயலாளர்களுக்கும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் சகல வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கும் பிரதேச சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை பாதரசம் அடங்கிய வெப்பமானிக்கும் இரத்த அழுத்தமானிக்கும் பதிலாக டிஜிட்டல் தொழில்நுட்பத்திலான வெப்பமானியையும் இரத்த அழுத்தமானியையும் அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம் சி.எல்.எவ். மின்குமிழ்களிலும் பாதரசம் அதிகளவில் காணப்படுவதால் அவற்றைப் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தும் போது அவை உடையாத வகையில் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துமாறும் சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

ரி.5சி.எப் .எல் மின்குமிழ்களுக்கு பதிலாக ரி-8 மின்குமிழ்களை பாவிக்கும் போது பாதரசம் சுற்றாடலில் சேருவதை சுமார் ஐம்பது சதவீதம் குறைக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# நிர்வாகிகள் தெரிவு


(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைக்கூட்டமும் பொதுக்கூட்டமும் அண்மையில் இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதன் போது 2013 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக ப.பிரபாகர், உபதலைவராக க.உஷாந்தன், செயலாளராக வா.சுலக்ஸ்சன், உபசெயலாளாராக சிந்துஜா, பொருளாளராக பே.சக்திபாகன் ஆகியோர் தெரிவாகினர். அத்துடன் விளையாட்டுத்துறை ,கலாசாரம்,கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் ஆகியவற்றிற்கு இரு செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி லக்ஷன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளனத் தலைவரும் வலி.தென்.மேற்கு பிரதேச சபை தவிசாளருமான அ.ஜெபநேசன் ஆகியோர் உட்பட இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டனர். (அ-2-23)



யாழ். எயிட் நிறுவனம் வலித்தூண்டல் றோ.க.வில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அண்மையில் உதவிப்பொருட்கள் வழங்கி வைத்துள்ளது. இவ்வுதவிப் பொருட்களை அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன் நகரிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த புலம்பெயர்வாழ் சமூக சேவையாளர் திருமதி ராஜேஸ்வரி ரஞ்சன் மாணவர்களுக்கு வழங்கிய பின் மாணவர்களுடன் நிற்பதைப்படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் செய்தியாளர்)

# விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை 16 ஆம் திகதி

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான நீர்வளம் அது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நீர்வள பாதுகாப்பு தொடர்பான பயிற்சி பட்டறை எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் பாலசுப்பிரமணியம் தபேந்திரகுமார் அறிவித்துள்ளார்.

பயிற்சி பட்டறை ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் தலா 20 பேர் வீதம் மொத்தம் 60 பேருக்கு நடைபெறவுள்ளது.

பயிற்சி பட்டறையில் நீர்வளத்தின் பாதுகாப்பு முறைகளும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் யாழ். பிராந்திய நீர்வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளரும் பிராந்திய முகா மையாளருமான பா.தவேந்திரகுமாரும் நிலத்தடி நீர்வழங்கல் என்ற தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீட பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தனும் பாடசாலை மாணவர்களுக்கான நீர்ப்பாவனை, சுத்தம் மற்றும் சுகாதாரம் என்ற தலைப்பில் யாழ் கிளிநொச்சி நீர்வழங்கல் சுகாதார திட்ட சமூகவியலாளர் ஏ.எம்.அரபாத் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளனர்.

பயிற்சி பட்டறையில் கலந்துகொள்பவர்களுக்கு நீரின் தரம் பற்றிய செயல்முறை பரிசோதனை முறைகளும் நடத்தி காட்டப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# பாடசாலைகளில் தோற்றுப்...

(14 ஆம் பக்க தொடர்ச்சி...)

இலங்கை அரசின் புதிய (2010) அபிவிருத்திக்கான வேலைச் சட்டகமான மஹிந்த சிந்தனை- எதிர்காலத்திற்கான தொலைநோக்கு பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

தொழில் கல்வி நிகழ்ச்சிகளினூடாக தொழில் சந்தைகளுக்கும் மேலதிக படிப்புகளுக்கும் மாணவர்களைத் தயார்படுத்தல்: தொழில் கல்வி நிகழ்ச்சிகளானது மாணவர்களது தொழில் சந்தைகளுக்கும் மேலதிக கல்வி வாய்ப்புகளுக்கும் தயார் செய்வதோடு ஒரு பரந்த வீச்சிலுள்ள தொழில் தெரிவுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயலுமானவர்களாகச் செய்யும் தனியார்துறை, தொழில் செய்வோர் மற்றும் தொழிற்சாலைகளின் உதவியோடு இந்த நிகழ்ச்சித் திட்டமானது கல்வித்துறையில் நிறைவேற்றப்படுவதோடு விருத்தி செய்யப்படும்.

(இலங்கை- ஆசியாவின் மலர்ந்து வரும் ஆச்சரியம்- 2010:117)

**☆ இடை விலகுவோருக்கும் பல் கலைக்கழகப் படிப்பா?**

முறைமையான பாடசாலை ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரணம், க. பொ.த. உயர்தரம் என்பவற்றுக்குள் ஒழுங்குமுறையாக கற்று வர வாய்ப்பற்றவர்களும் முறையில் (Informal) நிறுவன மாதிரியில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியை பெறுவதற்கு தற்போது ஏற்பார்டு செய்யப்பட்டுள்ளது.

இதனைப் பின்வருமாறு காட்ட முடியும்.


| முறைமையான பாடசாலை கல்விசார் தகுதி | தேசிய வாழ்க்கைத் தொழில் தகுதி மட்டம் (NVQL) |
|---|---|
| விஞ்ஞானி மாணி, கலைமாணி, தொழில்நுட்பவியல் மாணி | NVQL 7 |
| உயர் தேசிய பட்டயப்படிப்பு | NVQL 6 |
| தேசிய பட்டயப்படிப்பு (டிப்ளோமா) | NVQL 5 |
| க.பொ.த. உயர்தரம்- சான்றிதழ் | NQL 4 |
| க.பொ.த.சாதாரணம்- சான்றிதழ் | NVQL 3 |
| | NVQL 2 |

NVQL சார்ந்து சான்றிதழ் மட்டத்தில் 64 தேர்ச்சி நியமங்களும் பட்டயப்படிப்பு மட்டத்தில் 11 தொழில்நுட்பவியல் பரப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பவியல் பட்டயப் படிப்புக்கு ஏற்பாடு செய்வதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு தொழில்நுட்பவியல் கல்லூரி தரமுயர்த்தப்பட்டுள்ளது. ஒன்பது இத்தகைய தொழில்நுட்பவியல் கல்லூரிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

அடுத்த கட்டத்தில் தொழில் நுட்பவியல் மாணி பட்டத்தை இவர்களுக்கு வழங்குவதற்கு இளைஞர் விவகாரத் திறன் விருத்தி அமைச்சின் கீழ் வாழ்க்கைத் திறன் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் (University of Vocational Technology- Univotec Tec) உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டம் 2008 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. வாழ்க்கைத் திறன் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் கல்விப்பீடம் ஒன்றும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பக் கல்வியின் NVQ வினது முன்னேற்றத் திட்டம்**




மூலம்:- இலங்கை- ஆசியாவின் மலர்ந்து வரும் ஆச்சரியம் (2010:132)

இத்தகைய புதிய அணுகுமுறை மூலம் (2011-2013) மூன்று வருட காலத்தில் பாடசாலைகளில் இடைவிலகும் 3 50 000 கிராமிய இளைஞர்கள் உரிய பயிற்களுடன் பட்டம் பெற்று ஆற்றல் மிக்க மனித வளமாக மாறி விடுவர். பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் சமூக ஆர்வலர்களும் கல்வியியலாளர்களும் இவற்றை நன்கு அறிந்து மாணவர்களுக்கு உதவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Feb.14 காதலர்களுக்கு மட்டும்...

● மாவை. நா.கஜேந்திரன்

உலகத்தில் ஒவ்வொரு நொடியும் புதிய காதலர்கள் உருவாகிக்கொண்டுதான் இருப்பார்கள். காதலர்கள் இறந்து கொண்டும் இருப்பார்கள். இறப்பதற்காய்த்தான் காதல் என்றால் அந்த இறைவன் ஏன் காதல் என்ற ஒன்றைப் படைத்திருக்கிறான் என்று சிந்தித்த எவருமே இறக்கமாட்டார்கள்.

காதலர்கள் இறக்கின்ற போதிலும் காதல் என்றும் இறப்பதில்லை என்பதுஉண்மைதான். இருப்பினும் காதல் தோல்விக்கு இறப்புத்தான் முடிவென்றால் இந்த உலகமே தோற்றம் பெற்றிருக்காது. இந்தப்பூமி எங்கும் கல்லறை கள்தான் விதைத்துக் கிடக்கும்.

உண்மையான காதல் விட்டுக்கொடுப்புக் களையும் தியாகங்களையும் செய்யக் கூடியது. பூமியிலே விதைக்கப்படுகின்ற ஒவ்வொரு விதையும் முளைவிடுவதில்லை. வாழ்க்கை என்னும் புத்தகத்தில் காதல் எனும் பக்கம் தவறிவிடும்போது வாழ்க்கை எனும் புத்தகத் தையே இழந்துவிட்டேன் என எண்ணுவதனால் தான் இறக்கப்படுகிறது உயிர்கள்.

ஒவ்வொரு காதலரும் பிரியும் போதுதான் அவர்களின் மனங்களில் நம்பிக்கை அதிகமாக விதைக்கப்படுகிறது. சாதி, மதம், அந்தஸ்து இப் படிப் பல காரணங்களினால் காதலர்கள் பிரியும் போதும் காதல் மட்டும் இதயத்தில் நிலைத் திருக்கும். வருடங்கள் ஓடி மறையும். இளமை இல்லாது போய்விடும். அப்போதுகூட காதல் இதயத்தில் புதிதாய்ப் பூத்த மலர் போல் பூத்துக் கிடக்கும்.

உன்னை விரும்பும் அவனோ, அவளோ



உன்னைப் பிரிந்து போன பின்பும் அவன் அல்லது அவள் வாழ்வு சிறப்பாய் இருக்க இறைவனை வேண்டுகிறாயா? அதுதான் உண்மைக்காதல்.

சமாதிகளுக்குள் சரித்திரமாவது காதலல்ல. இழப்புக்கள் வரும்போது மனம் சிறை வாசம் அனுபவிக்கும். போகப்போக ரணங்கள்மறைந்து பூரணமனிதனாவாய். அதற்குள் அவசரமாய் எடுக்கும் முடிவுகள் உயிரிழப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றது.

காதலனோ அல்லது காதலியோ பிரிந்த பின்பும் அந்த நினைவுகளில் வாழ்ந்து வென்று முடிக்கும் காதலர்கள் நம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

நீ அல்லது அவள் இறந்து விட்டால் உன்னால் அல்லது அவளால் நிம்மதியாக வாழ முடியுமா? அப்படிவாழ்ந்தாலும்கூட வாழ்வில்வரும் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கமுடியுமா?

காதலர்களே காதல் புனிதமானதுதான். உங்கள் காதல் உண்மையானதுதான். உயர் வானதுதான். ஆனால் அதற்கு மேல் வாழ் வென்ற ஒன்று எம்மை கைநீட்டி அழைக்கிறது. அதைத் தட்டிவிட்டு அவசரத்தில் எடுக்கும் முடிவுகள் நம் குடும்பங்களை, நம் உறவுகளை, நம் சமூகத்தை மீளாத்துயரில் தள்ளிவிட்டு நாம் மட்டும் நிம்மதியாக மேலே போய் விடலாமா?

இதயங்கள் இடம் மாறியது உண்மை, சந்தித்தது உண்மை, மனம் விட்டுப்பேசியது உண்மை, பரிசுப்பொருட்கள் பரிமாறியது உண்மை. அவள் அல்லது அவன் கைகளை இறுகப்பிடித்தபடி கண்களை மூடி தோளில் சாய்ந்தது உண்மை, இருவருக்குள்ளும் சிறுசிறு சண்டைகள் வந்தது உண்மை, இருவரும் ஒன்றாய் வாழ்வது போல் கனவு கண்டதும் உண்மை.

இவ்வளவு உண்மைகளுக்கு நடுவில் பிரிவுஎனும் உண்மையை புரிந்து கொள்ளாவிடில் அந்தப் புனிதக் காதலையே புரிந்து கொள்ளவில்லை என்பதுதானே பொருள்.

பார்ப்பதற்கு கண்களையும் பேசுவதற்கு வாயையும் சுவாசிக்க மூக்கையும் தொட்டுணர கைகளையும் தந்த இறைவன் காதல் செய்யத்தானே இதயத்தைத் தந்திருக்கிறார். காதல் செய் புனிதமாய், உண்மையாய், பண்பாய்.

காதல் என்ற வார்த்தைதான் உலகிலேயே பெரியது. அந்தப் பெரிய வார்த்தையினை நாம் சிறுமைப்படுத்தாமல் காதல் செய்வோம்.



### முற்றுப்பெறுமா காதல்?

உன் வாழ விருப்பமில்லை
உன் இதயத்திலிருந்து
விடுபட்டதால்
உறவுகளுக்காய் விட்டேன்
நீ - என்னை
நல்ல மறந்தாலும்...
நினைவுகளால் நடக்கின்றேன்
நிறைவேற்ற முடியாமல்
முற்றுப் பெறாத காதலினால்
தனிவிட்ட உன்னை
எங்கனம் தேடி பார்ப்பேன்

சிந்து சிவதாஸ்
சுதுமலை தெற்கு

உன்
மனது கதைக்கின்றதா?
காதலியின்
கைகளைப் பற்றிக்கொள்
மனம்விட்டு
உளம் தொட்டு
அவளுடன் பேசிப்பார்
பழம் குறையும்
இதயத்தில்
சுமை கசியும்
மலை தொட்டு
அழுகின்ற சாரல் அவள்
உன் மனம் தொட்டு
நனைக்கின்ற
தூறல் அவள்
அவள்
இதயத்தில்
தலைவைத்து சாய்ந்துபார்
காற்றுடன் இலைகளின்
கதை கேட்கும்
கட்டவிழும் மொட்டின்
லயம் கேட்கும்
பூக்களுடன்
வண்டு பேசும்
மொழி கேட்கும்
உன் துயரத்தில்
உயிர் உருகும்
ஜதி கேட்கும்

இ.ச.ஆனந்தன்

### கவிஞனின் காதலி...

நான்... உனக்காக எழுதிய
கவிதைகளே என்னை
கவிஞனாக்கியது
ஒவ்வொரு வரிகளிலும்
உனக்கானவை என உணர்ந்தேன்...
ஆனால், ஒரு கணப்பொழுதில்
தசக்தி எறிந்து - உன்
வீட்டுக் குப்பைத் தொட்டியில்
போட்டு விடுவாய்
நான் உன் மீது கொண்ட
காதல் உணர்வை...
கவிஞனைக் காதலிப்பது
குற்றமா...! என்றாவது ஒருநாள்
வருத்தப்படுவாய்... கவிஞனாக அல்ல...
என் காதலனாக....?

அ.சோராம் பருத்தித்துறை

Happy Valentines

### வந்து போன வசந்தம்

கவலையிழந்து
கவிதைக்கு அலைபாட்டு
காற்றைத் தட்டி...
இசை தந்து
கவிஞராவாய்..
கவி வரைந்து..
கவிதை வானில்
சிறகடித்து
காவர்களில் வசந்தமாகி
வசந்தகால மழையாகி
காதலில் மூழ்கி
காவியம் படைத்து
அந்த வசந்தகால
காதலில் வந்து போன
இன்பமழை இன்னும்- என்
மனதில் பொழிகின்றது

கவிஞர் ம.புவிலக்சி,பெரிய நீலாவனை

Love

# இலங்கைக்கு கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் முன்வரவில்லை

## ஐ.தே.க பொதுச்செயலாளர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறப் போவதில்லை என்பதை விட நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்க மறுத் துள்ளமையே உண்மையான விடயம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலா ளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறப்போவதில்லை என்று இலங்கை மத் திய வங்கி அறிவித்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலங்களில் அரசாங்கம் சர் வதேச நாணய நிதியம் தனியார் வங்கிகளில் பெருந்தொகையான கடனை பெற்றுள்ளது. அதனால் நாடு சிக்கலில் வீழ்ந்துள்ளது.

எனவே கடன் குழியில் விழுந்து சிக்கித் தவிக்கும் இலங்கை சர்வதேச நாணய நிதி யம் கடன் வழங்காது என்பதால் தப்பித்துக் கொள்ள கடன் பெறமாட்டோம் என அறி வித்துள்ளது.

பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள் வதற்காகவே கடன் வாங்க மாட்டோம் என்று மத்திய வங்கி மறைமுகமாக கூறுகிறது.

எவ்வாறாயினும் இலங்கை மத்திய வங்கி யின் கூற்றுப்படி இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையில் எதிர்கால உறவுகள் குறித்து தொடர்ச்சியாக பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

2009 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் டொலராக இருந்த இலங்கையின் அந்நியச் செலாவணி 7 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக அந்நிய செலாவ ணியை அதிகரித்துக் கொள்வதற்கோ வெளி நாட்டு கடன்களை பெற்றுக் கெள்வதற்கோ அவசியம் இல்லை என்று மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

இருந்தபோதும் இலங்கையானது சர்வ தேச நாணய நிதியத்தின் வகைப்படுத்தலுக்கு அமைய நேரடியாக வரவு செலவுத்திட்ட குறைபாட்டை நிரப்புவதற்காக கடன் வழங்க வேண்டிய நாடுகளின் பிரிவில் இல்லாத நிலையில் தற்போது கூறப்பட்ட கடன் தொகையை பெற முடியாது.

எனவே எதிர்காலத்தில் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறக்கூடிய வாய்ப்பு இல்லை என்று மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித் தார்.

# புத்தி கூர்மையடைய சூரை மீன் சாப்பிடுங்கள்

## அமைச்சர் விமல் அறிவுரை

(கொழும்பு)

ஜப்பானிய சிறுவர்கள் அதிகளவாக சூரை மீனை உட்கொள்வதால் அவர்கள் விவேகமு டையவர்களாக காணப்படுகின்றனர். இவ் வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

முல்லேரியாவில் அண்மையில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்தால் அழிவடைந்த பின்னர் ஜப் பானியர்கள் எவ்வாறு எழுச்சி பெற்றனர்? வியக்கத்தக்க தொழில்நுட்ப உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு எவ்வாறு அவர்களது மூளைகள் விருத்தியடைந்தன.

அவர்கள் தங்களது கல்வி முறையிலும் உட்கொள்ளும் முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தினர். அவர்கள் சூரை மீனைப் பிடி த்து அதனை உட்கொண்டனர். சூரை மீனைப் போன்று புத்திக்கூர்மைக்கு உதவும் வகை யில் வேறு எந்த மீனும் இல்லை.

ஜப்பானிய சிறுவர்கள் அதிகளவான சூரை மீனை உட்கொள்வதினாலேயே விவேகமு டையவர்களாக உள்ளனர் என அவர் கூறி னார்.

சூரை மீனை கிரந்தித் தன்மையுடைய மீன் என ஒதுக்காது இலங்கையர்களும் இம் மீனை அதிகளவில் உட்கொள்ளவேண்டு மென அவர் கோரினார். (அ-2)

# ஆயிரத்து 86 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன

தபால் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவென புதிதாக ஆயிரத்து 86 உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த வெற் றிடங்கள் நாளை வெள்ளிக்கிழமை நிரப்பப்படும் என தபால்மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்கள வரலாற்றில் சேவைக்கு அதிகூடிய உத்தியோகத்தர்கள் ஒரே தட வையில் இணைத்துக் கொள்வது இதுவே முதல்முறை என அவர் குறிப்பிட்டார். கடந்த 16 வருடங்களாக தபால் திணைக்களத்திற்கு புதிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப் படவில்லை என தபால்மா அதிபர் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக புரிந்து கொள்ளாத அறிவு நமக்குச் சொந்தமாகாது. -கதே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மரம், கிளை, இலை கடந்து கிளியின் கழுத்துத் தெரியட்டும்!

துரியோதனனுக்கும் அரிச்சுனனுக்கும் இடையில் வில்வித்தைப் போட்டி ஒன்றை நடத்துகின்றார் துரோணர். பெரிய மரமொன்றில் கிளி ஒன்றை வைத்துவிட்டு கிளியின் தலையை விழுத்துமாறு இருவருக்கும் பணிக்கிறார் குருநாதர்.

முதலில் துரியோதனனுக்கான சந்தர்ப்பம். அம்பை எய்யத் தயாராகின்றான் துரியோதனன்.

அச்சந்தர்ப்பத்தில் துரோணர் சில கேள்விகளை அவனிடம் வினவுகின்றார்.

துரோணர்: துரியோதனா! உனக்கு மரம் தெரிகிறதா?
துரியோதனன்: இல்லை! சுவாமி.
துரோணர்: மரத்தின் கிளைகள் தெரிகின்றனவா?
துரியோதனன்: இல்லை! சுவாமி.
துரோணர்: மரத்தின் இலைகள் தெரிகின்றனவா?
துரியோதனன்: ஆம்! சுவாமி.

நீர் இப்போது அம்பை எய்யலாம் என்று துரோணர் கூற, துரியோதன் அம்பை எய்கின்றான்.

துரியோதனின் அம்பு ஒரு இலைக் கொப்பை அடித்து வீழ்த்திச் செல்கிறது. கிளியின் பக்கமே அந்த அம்பு செல்லவில்லை. அப்படியானால் எப்படித்தான் கிளியின் தலைவிழும்?

இப்போது அரிச்சுனனுக்கான சந்தர்ப்பம்.

துரோணர்: அரிச்சுனா! உனக்கு மரம் தெரிகிறதா?
அரிச்சுனன்: இல்லை! சுவாமி.
துரோணர்: கிளை தெரிகிறதா?
அரிச்சுனன்: இல்லை! சுவாமி.
துரோணர்: இலை தெரிகிறதா?
அரிச்சுனன்: இல்லை! சுவாமி.
துரோணர்: கிளி தெரிகிறதா?
அரிச்சுனன்: இல்லை! சுவாமி.
துரோணர்: அப்படியானால் உனக்கு என்னதான் தெரிகிறது?
அரிச்சுனன்: கிளியின் கழுத்து மட்டும்தான் தெரிகிறது சுவாமி.

நீ இப்போது அம்பை எய்யலாம் என்று துரோணர் உத்தரவிட, அரிச்சுனனின் அம்பு கிளியின் தலையில் அடிக்கிறது. பார்ப்போர் வியக்க, கிளியின் தலை நிலத்தில் வீழ்ந்தது.

துரியோதனனுக்கும் அரிச்சுனனுக்கும் இடையில் துரோணர் நடத்திய போட்டியின் முடிபுகள் தமிழர்களாகிய எங்களுக்கு மிகவும் பொருத்தமானது.

நாங்களும் பல சந்தர்ப்பங்களில் கிளியின் தலையை மறந்து மரத்தின் கிளையையும் இலையையும் பார்த்ததுண்டு -பார்ப்பதும் உண்டு.

இதனால் இலக்கை அடைய முடியாமல் போகிறது.

வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து நிலைமையை அறிய முற்படுகின்ற போது, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி எடுத்துரைக்க மறந்துவிட்டு, பண்ணை வீதி இன்னமும் திருத்தப்படவில்லை என்று வெளிநாட்டவருடன் வேதனைப்பட்டுக் கொள்வோம்.

அதுமாதிரித்தான் அரசியலிலும். அரசு சூச்சூ... காட்ட நாங்களும் அதன்வழி. இதற்கெல்லாம் முடிவு கட்டப்பட வேண்டும். புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலை தொடர்பில் அந்த மாணவர்களின் பெற்றோரை ஜனாதிபதியிடம் கதைக்கச் செய்தமைக்காக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவைப்பாராட்ட வேண்டும்.

பெற்றோரைவிடுத்து துணைவேந்தர், பீடாதிபதிகள் என்று ஜனாதிபதியுடன் சந்திப்பை ஏற்படுத்தி மாணவர்களின் விடுதலை பற்றிக் கதைத்திருந்தால் கதை கந்தலாகி இருக்கும்.

தன்பிள்ளையை விடுதலை செய்யுமாறு கண்ணீர் விடும் தாயிடம் கதையும் காரணமும் கேட்கமுடியுமா என்ன?

தாயின் கண்ணீருக்கான பதில் மாணவரின் விடுதலையாகும்.

இதுபோல சிந்தித்து நுட்பமாகச் செயற்படுவது தமிழ் அரசியல்வாதிகளின் மிகப் பொறுப்பான பணி. நடக்குமா?

## யாழ்.போதனா வைத்தியசாலை கட்டடத் தொகுதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மத்திய செயற்பாடுகளுக்கான கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

இரண்டாயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நொபு ஹிடோ ஹோபோ மற்றும் ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் அதிகாரிகள், இலங்கையின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-4-6)

## கர்தினால் மெல்கம் ரஞ்சித் வத்திக்கான் பயணம்

அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை விரைவில் வத்திக்கானுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போப்பாண்டவர் தெரிவு தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கும் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்காகவும் அவர் இவ்வாறு வத்திக்கானுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தற்போது போப்பாண்டவராக பதவி வகித்து வரும் அதி வணக்கத்திற்குரிய 16 ஆம் பெனடிக் ஆண்டகை எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் பதவியை இராஜினாமா செய்கிறார். கடந்த 600 ஆண்டுகளில் இதற்கு முன்னர் போப்பாண்டவர்கள் எவரும் பதவியை இராஜினாமா செய்ததில்லை. 85 வயதான 16-ம் பெனடிக்போப்பாண்டவர் வயது முதிர்வு காரணமாக உரிய முறையில் கடமைகளை ஆற்ற முடியவில்லை எனத் தெரிவித்து தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளார்.



போப்பாண்டவர் தெரிவு தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. மொத்தமாக 116 கர்தினால்கள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஈஸ்டர் பண்டிகைக்கு முன்னதாக புதிய போப்பாண்டவர் தெரிவு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

## சத்திய தரிசனம்



உடல் இறைவன் அளித்த பரிசு. பிராணனும் இறைவன் அளித்த பரிசு. அனைத்தும் இறைவன் அளித்தபரிசு. அலுவலகத்திற்குச் சென்று கடமையைச்செய். வியாபாரத்தைப் பெருக்கு. அனைத்தும் இறைவனைச் சார்ந்த பணி. இது எனது வேலை. அது இறைவனது வேலை என்றீ பிரிக்கலாகாது. வியாபாரத்தில் பங்குதாரர்கள் உண்டு. இறைவன் பங்குதாரர் அல்ல. இறைவனே எல்லா பங்குகளுக்கும் உரிமையாளர். உயிரணுக்கள் அனைத்தும் நமக்குள் இருப்பதுபோல நாம் அவரது விஷ்வ வடிவத்தினுள் இருக்கிறோம்.

## ரணிலைச் சந்தித்து ஹிருணிகா பேச்சு

ஜனாதிபதியின் ஆலோசகர் அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வி ஹிருணிகா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சிறிகொத்தாவிலில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் மேற்படி சந்திப்பு நடைபெற்றுள்ளது. சுமார் அரை மணித்தியாலயம் இந்தச் சந்திப்பு நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் என்ன விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (அ-2)

## அம்பாறையில் மினி சூறாவளியால் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வீரமுனை கிராமத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வீசிய மினிசூறாவளியினால் பல வீடுகள் சேதமடைந்துள்ள நிலையில் வீரமுனையின் 30 வீட்டுத்திட்டப் பகுதியிலும் இந்த மினி சூறாவளி வீசியுள்ளதாக அப்பகுதி தகவல்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளதுடன் சில வர்த்தக நிலையங்களின் கூரைகள் சேதமடைந்துள்ளன. (அ-2)

## மெகாவாசி பரிசளிப்பு விழா


(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் மெகாவாசி இறுதிச்சுற்று பரிசில் வழங்கும் நிகழ்வு -2012 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுப்ராதரக் கிளையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை இலங்கை வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளர் ரீ.செந்தில்நாதன் ஆற்றுவார். வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி கருத்துரை நிகழ்த்துவார். (அ-5)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### பிள்ளையார் கோயிலில் தோப்புக்கரணம் இடுவது ஏன்?

தடங்கல்கள் ஒழிய கணபதி கோயிலில் வணங்கி வர பக்தர்களுக்கு மிகையான ஆர்வமிருந்தாலும் தோப்புக்கரணம் செய்வதில் பலரும் பின்தங்கி நிற்பதைக் காணலாம். அப்படியே செய்தாலும் கையைப் பிணைத்து இரு காதுகளிலும் தொட்டு உடலை ஒருமுறை குலுக்கிவிட்டுச் செல்வதைக் காணலாம்.

*வலம் கையால் வாமஸ்ரவனை மிடகைவிரலினால்*
*வலம் காதும் தொட்டு குழலினை பிணைந்த நிலையில்*
*நிலம் கைமுட்டாலே பலகுறி தொடவே அடியனுக்கின்*
*நலம் காருண்யாப்தே களக மமவிக்னம் கணபதே*

மேலே சொல்லியிருக்கும் வரிகளை உச்சரித்துக்கொண்டே பிள்ளையாரே வணங்கிக்கொண்டு தோப்புக்கரணம் இடவேண்டும். அதாவது வலதுகையால் இடது காதும் இடது கையால் வலது காதும் தொட்டுக்கொண்டு இரு கால்களும் பிணைத்துக்கொண்டு நின்று கொண்டு, கைமுட்டுக்கள் பலமுறை தரையில் தொட்டுக்கணபதியை வணங்கவேண்டும் என்பது விதி.

வேறெந்த தெய்வ சந்நிதியிலும் தோப்புக்கரணம் இடுதல் என்ற விதிமுறையில்லை. ஆனால் கணபதி சந்திதானத்தில் இது மிக முக்கியம்.

இடதுகாலின் மேல் ஊன்றி நின்று வலது கால் இடதுகாலின் முன்பக்கமாக இடதுபக்கம் கொண்டுவந்து பெருவிரல் மட்டும் தரையில் தொட்டு நிற்கவும் இடதுகை பெருவிரலும் ஆட்காட்டி விரலும் சேர்ந்து வலது காதிலும் வலதுகை இடதுகையின் முன்பக்கமாக இடதுபக்கம் கொண்டுவந்து முன்கூறிய இரு விரல்களால் இடது காதையும் பிடிக்கவேண்டும். பின்பு குனிந்து வணங்கி நிமிர்ந்து வருவதே தோப்புக்கரணத்தின் முறை.

பக்தரைப்பொறுத்து இது எத்தனை முறை செய்யவேண்டும் என்று முடிவு செய்யலாம். பொதுவாக மூன்று, ஐந்து, ஏழு, பன்னிரண்டு, பதினைந்து, இருபத்தொன்று, முப்பத்தாறு என்ற பல கணக்கில் செய்வதுண்டு.

இவ்வாறு செய்வதில் பக்தரிடமிருந்து தடங்கல்கள் விலகிச் செல்லும் என்றே நம்பிக்கை.

அறிவியல் சம்பந்தப்படுத்திப் பார்ப்போமானால் இதைப்புத்தியையுணர்த்தும் ஓர் உடற்பயிற்சியாக இதைக்காணலாம். இது இரத்த ஓட்டத்தை உணர்வடையச் செய்யும். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் என்று கண்டு வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு போட்டிகளிலும் ஆஸியை வீழ்த்தியது தீவுகள்

## ரி-20 போட்டியில்....



அவுஸ்திரேலிய அணியுடன் இடம்பெற்ற முதலாவது ரி-20 ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பிறிஸ்பேன் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சாள்ஸ் 35 பந்துகளில் 57 ஓட்டங்களையும் (1 சிக்ஸ்,7பவுண்டரி உட்பட), பிராவோ 27 பந்துகளில் 32 ஓட்டங்களையும், பொலாட் 17 பந்துகளில் 26 ஓட்டங்களையும் (1 சிக்ஸ், 2 பவுண்டரி உட்பட), ரசல் 11 பந்துகளில் 23 ஓட்டங்களையும், சமி 7 பந்துகளில் 20 ஓட்டங்களையும் ( 2சிக்ஸ, 1 பவுண்டரி உட்பட) பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஃபோள்க்னர் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக வோக்ஸ் 2 சிக்ஸ், 2 பவுண்டரி உட்பட 33 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றார். மாஸ் 21 ஓட்டங்களையும், ஹடின் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பொலாட் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பொலாட் தெரிவுசெய்யப்பட்டார்.

## உலகக் கிண்ணத்தில்....



உலகக்கிண்ண மகளிர் சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

சுப்பர்-6" சுற்றில் அசத்திய அவுஸ்திரேலிய அணி ஏற்கனவே இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. இந்நிலையில் சுப்பர் 6 சுற்றின் எஞ்சிய போட்டிகள் நேற்று நடைபெற்றன.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47 ஓவரில் 164 ஓட்டங்களுடன் சுருண்டது. அணி சார்பாக டாட்டின் 60, நடாசா 26 , சுகுனா 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

165 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 47.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணிசார்பாக ஜெஸ் காமிரான் 39, அலெக்ஸ் பிளாக்வெல் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.


ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடும் டில்லி டேர் டெவில்சும், புனே வாரியர்ஸ் அணியும்



பண்ட மாற்று முறையில் ஒரு வீரரை தங்களுக்குள் மாற்றிக் கொண்டன. டில்லி அணியில் விளையாடி வந்த நியூசிலாந்து வீரர் ரோஸ் ரெய்லர் இந்த ஆண்டு (6ஆவது ஐ.பி.எல்) புனே வாரியர்ஸ் அணிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ரெய்லர் முதல் 3 ஐ.பி.எல். போட்டியிலும் பெங்களூர் அணியிலும், 4ஆவது போட்டியில் ராஜஸ்தான் அணியிலும் 5ஆவது போட்டியில் டில்லி அணியிலும் ஆடினார். தற்போது புனே அணியில் ஆட உள்ளார். புனே வாரியர்ஸ் அணியில் இடம் பெற்று இருந்த ஆசிஷ் நெக்ரா டில்லி அணிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## தாவி விளையாடுகிறார் ரொஸ் ரெய்லர்

## 2020 ஒலிம்பிக்கிலிருந்து விடைபெறுகிறது மல்யுத்தம்?



ஒவ்வொரு ஒலிம்பிக் முடிந்ததும், அதில் இடம்பெற்ற விளையாட்டுகளுக்கு மக்கள் மத்தியில் எத்தகைய வரவேற்பு இருந்தது? போட்டியை நேரில் பார்த்தவர்களின் எண்ணிக்கை, ரி.வி. கருத்துக் கணிப்பு, ஊக்கமருந்து பாவனை, உலக அளவில் அந்த விளையாட்டுக்கு உள்ள புகழ் ஆகியவற்றை சர்வதேச ஒலிம்பிக் சங்கம் ஆய்வு செய்யும். அதன் அடிப்படையில் வரவேற்பு குறைந்த ஒரு சில விளையாட்டுக்கள் நீக்கப்படுவது உண்டு.

இந்த வகையில் 2020 ஆண்டு ஒலிம்பிக் போட்டியிலிருந்து மல்யுத்தத்தை நீக்க சர்வதேச ஒலிம்பிக் சங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்குப்பதிலாக,வேறு போட்டி ஒன்றைச் சேர்க்கவும் ஐஓசி திட்டமிட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தின் லாசானே நகரில் நடந்த சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் செயற்குழு கூட்டத்தில், ஒலிம்பிக் போட்டியில் தற்போது இடம் பெற்றுள்ள 26 வகை விளையாட்டுக்களில் இருந்து ஒன்றை நீக்குவது பற்றியும், புதிதாக வேறு ஒரு விளையாட்டை இடம் பெறச் செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. வாள்வீச்சு, குதிரையேற்றம், நீச்சல், ஓட்டம் மற்றும் துப்பாக்கி சுடுதல் ஆகிய 5 விளையாட்டுக்களை உள்ளடக்கிய 'மொடர்ன் பென்டத்லான்' போட்டியை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் மே மாதம் ரஷ்யாவில் நடக்கும் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு செப்ரெம்பரில் ஆஜன்ரீனாவில் இடம்பெறும் ஐஓசி இன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

மேலும், 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இடம் பெறும் 26 விளையாட்டுகளில் 25 விளையாட்டுகளுக்கு ஐ.ஓ.சி.யின் நிர்வாக குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்த விளையாட்டு பிரிவுகள் விபரம் வருமாறு:

தடகளம், துடுப்பு படகு, பூப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கனோயிங், சைக்கிள் பந்தயம், குதிரையேற்றம், வாள்சண்டை, காற்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், பளுதூக்குதல், ஹேண்ட்பால், ஹொக்கி, ஜூடோ, நீச்சல், மாடர்ன் பென்டத்லான், தேக்வாண்டோ, டெனிஸ், டேபிள் டெனிஸ், துப்பாக்கி சுடுதல், வில்வித்தை, டிரையத்லான், பாய்மரப்படகு போட்டி, கைப்பந்து.

## பாகிஸ்தான் தென்னாபிரிக்கா 2ஆவது டெஸ்ட் இன்று

தென்னாபிரிக்கா பாகிஸ்தான் அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் இன்று ஆரம்பமாகிறது.

3 போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா 211 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடரை இழக்காமல் இருக்கும் வகையில் பாகிஸ்தான் இந்த டெஸ்டில் வெற்றி பெற கடுமையாக போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## இந்தியாவுடனான போட்டி சவாலாக இருக்கும் - கிளார்க்

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இந்திய தொடர் தான் மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்று அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் கூறியுள்ளார்.

இந்தியாவுடன் 4 டெஸ்ட் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக கிளார்க் இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்பு சிட்னியில் செய்தியாளர்களுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரிக்கி பொண்டிங், மைக் ஹஸி ஓய்வு, காயத் தால் சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் பந்து வீச முடியாதது, தனது காயம் ஆகிய வற்றை மனதில் கொண்டு பேசிய கிளார்க், இந்திய தொடர் இதுவரையிலான தனது தலைமைத்துவத்தில் கடினமான பணியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

தன்னுடைய நிலை பற்றிக் குறிப்பிடுகையில், முன்பை விட இப்போது நன்றாக உள்ளேன். கடந்த 4 நாட்கள் கிடைத்த ஓய்வில் காயத்தில் இருந்து தேறிவிட்டேன். அணியின் உடல்தகுதி நிபுணர் அலெக்ஸ் கவுன்டோரிசின் ஆலோசனைப் படி நடந்து வருகிறேன். இந்தியாவுக்கு சென்றாலும் எனக்கு போதிய காலஅவகாசம் உள்ளது. எனவே முதல் டெஸ்டுக் குள் நான் முழு உடல்தகுதி பெற்று விடுவேன்.

### சவாலான போட்டி

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இந்த இந்திய சுற்றுப்பயணம் கடினமான சவாலாகும். டெஸ்ட் போட்டி தொடருக்காக ஒவ்வொரு முறை இந்தியாவுக்கு சென்ற போதெல்லாம் அப்பயணம் மிகவும் கடினமாகவே அமைந்திருக்கிறது. அங்கு (இந்தியா) அதிக போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றியும் பெற்றதில்லை. எனவே இந்த தொடர் மிகப்பெரிய சவால் என்பதை வீரர்களும் அறிவார்கள். அதை உணர்ந்து, போட்டிக்கு சிறப்பாக தயாராவதற்கும், அங்குள்ள சூழலில் பழகுவதற்கும் தான் வீரர்களை முன்கூட்டியே இந்தியாவுக்கு அனுப்பியுள்ளோம்.

இங்கிலாந்து அணியை போன்று இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்குவீர்களா? என்று கேட்கிறீர்கள். அது பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஆடுகளத்தின் தன்மை எப்படி உள்ளது என்பதை பார்த்த பிறகே இது குறித்து இறுதி முடிவு எடுப்போம் என்றார் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்லிலிருந்து விலகியது ஹீரோ

டி.எல்.எப். நிறுவனத்தைச் தொடர்ந்து தற்போது ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனமும் ஐ.பி.எல். விளம்பரதாரர் பட்டியலிலிருந்து விலகியுள்ளது.

2007-ம் ஆண்டு முதல் ஐ.பி.எல் விளம்பரங்களில் ஒன்றாக ஹீரோ இருந்து வந்தது. அந்த ஆண்டில் இந்நிறுவனம் இந் திய கிரிக்கெட் சபையுடன் 22.5 மில்லியன் டொலர் அளவுக்கு ஒப்பந்தம் செய்திருந்தது.

5 ஆண்டுக்கான ஒப்பந்தம் இது. கடந்தாண்டு இது முடிபடைந்தது. தற்போது விளம்பரத்தை மேலும் நீட்டிக்கவில்லை. ஹீரோ மாறாக விலகிக் கொண்டுள்ளது.

ஐ.பி.எல் தொடரில் முதல் 3 ஆண்டுகள் ஹீரோ நிறுவனம் டில்லி டேர்டெவில்ஸுடன் இணைந்திருந்தது. பின்னர் கடைசி 2 ஆண்டுகள் மும்பை இந்தியன்ஸின் அனுசரணையாளராக இருந்தது.


இது குறித்து ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 20 வருடங்களாக நாங்கள் கிரிக்கெட்டுடன் இணைந்திருக்கிறோம். எனவே நாங்கள் தற்போது கிரிக்கெட்டை விட்டு விலகுவதாகக் கூறமுடியாது.

அனுசரணைப் பணியிலிருந்து மட்டுமே விலகுகிறோம் என்று அந்நிறுவனம் கூறியுள்ளது. ஐ.பி.எல்லுடனான அனுசரணையிலிருந்து ஹீரோ மோட்டோகார்ப் விலகிக் கொண்டுள்ள நிலையில், இந்நிறுவனம் இந்திய ஹொக்கி சம்மேளனத்துடன் புதிய நான்கு ஆண்டு கால ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற பண்டத்தரிப்பு ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தினையும், இளவாலை கென்றஸ் விளையாட்டுக் கழகத்தினையும் படத்தில் காணலாம்.

# புதிய வரலாறு படைத்தார் பங்கஜ் அத்வானி




வேல்ஸில் உள்ள நியூபோர்ட் நகரில் பெட்விக்டர் வேல்ஸ் ஓபன் புரோஸ்னூக்கர் தொடர் நடைபெற்று வருகிறது.

இதன் முதல் சுற்றில், எட்டு முறை உலக சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் பங்கஜ் அத்வானி, இங்கிலாந்தின் ஷான் முர்பியை சந்தித்தார்.

இதில் அபாரமாக ஆடிய அத்வானி 4:3 (76:15, 10:100, 121:8, 72:2, 36:103, 28:73, 64:15) என்ற கணக்கில் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

இதன்மூலம் இத்தொடரில், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற புதிய வரலாறு படைத்தார்.





தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையினையும் விருந்தினர்கள் மேடையில் நிற்பதனையும் வெற்றி பெற்ற மாணவன் பிரதம விருந்தினரால் வெற்றிக் கேடயத்தினை பெற்றுக் கொள்வதனையும் படத்தில் காணலாம்.

## எல்லே சுற்றுப்போட்டி பிறைஸ்ரார் வெற்றி

சண்டிலிப்பாய் பிரதேச சபை பெரு விளையாட்டுக்களில் ஓர் அங்கமான ஆண்களுக்கான இறுதி எல்லே போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதி எல்லே போட்டியில் சென். தோமஸ் விளையாட்டுக் கழகமும், பண்டத்தரிப்பு பிறைஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் 4:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பண்டத்தரிப்பு பிறைஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

## எல்லே போட்டி

சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையில் வலைப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் முதலாவது அரையிறுதி சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு பிறைஸ்ரார் அணியும், பண்டத்தரிப்பு சிவசக்தி அணியும் மோதிக் கொண்டன.

இதில் 12:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் பண்டத்தரிப்பு பிறைஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

2-வது அரையிறுதிச் சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கியம் அணியும், கல்வயல் விநாயகர் அணியும் மோதிக் கொண்டன. இதில் 19:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கல்வயல் விநாயகர் அணி வெற்றிபெற்றது.

## உடுவில் பிரதேச விளையாட்டு விழா

உடுவில் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு பெண்களுக்கான துடுப்பாட்டம், வலைப்பந்து, கரப்பந்து போன்ற பெரு விளையாட்டுக்கள் நாளை மறுதினம் 16-ம் திகதி (சனிக்கிழமை) காலை 8.30 மணியளவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே இப்போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் 8.30 மணிக்கு முன்னராக மைதானத்திற்கு வருமாறு உடுவில் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

## வோலை பிரதேச விளையாட்டு விழா

வோலை பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியானது எதிர் வரும் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணியளவில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

## பிரதேச விளையாட்டு விழா

பருத்தித்துறை பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு பெரு விளையாட்டுக்கள் நடைபெற உள்ளது. இதில் ஆண்,களுக்கான கால்பந்தாட்ட போட்டியானது நாளையும், நாளை மறுதினமும் காலை 8.30 மணிக்கு திக்கம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

எனவே பங்குபற்றும் கழகங்கள் குறித்த திகதியில் திக்கம் விளையாட்டுக் கழக மைதானத்திற்கு வருமாறு பருத்தித்துறை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

---

பருத்தித்துறைபிரதேசவிளையாட்டுவிழாவை முன்னிட்டு பெரு விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளது. இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியானது எதிர்வரும் 25-ம் திகதி வல்லை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

எனவே பங்குபற்றும் கழகங்கள் குறித்த திகதியில் வல்லை பொது விளையாட்டு மைதானத்திற்கு வருமாறு பருத்தித்துறை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி (முதன்மை நிலை 2,3) இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளதுடன், வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கி வைப்பார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குறுதியை நிறைவேற்ற...

ஏஎவ்பி செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் காப்பாற்றத் தவறிவிட்டது.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடிவுபெறவில்லை. அத்துடன் இவ்விசாரணை சுயாதீனமான வகையில் பக்கச்சார்பற்ற முறையில் இடம்பெறவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் இவ்விசாரணைகள் பாரபட்சமற்ற முறையிலும் நம்பிக்கையளிக்கும் வகையிலும் இடம்பெற வேண்டும்.

இலங்கைக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் விஜயம் செய்த நிபுணர் குழு உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் கோரியிருந்தது.

2006-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பில் இலங்கைப் படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வெளிப்படைத் தன்மை இல்லை.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற சட்டத்திற்கு புறம்பான படுகொலைகள், ஆட்கடத்தல் மற்றும் காணாமல்போதல்கள் என்பனவற்றுக்கு பொறுப்புக்கூறவதற்கான நடவடிக்கையை அவசரமாக மேற்கொள்ள வேண்டும்.

ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சிறைக் கைதிகள் நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என ஏஎவ்பி செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

## தண்டனையில்..

களோடு எடுத்துக்காட்டியுள்ளேன்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டினை கனடா போன்ற நாடுகள் புறக்கணிக்க போவதாக எச்சரிக்கையளிப்பது, மகிந்த ராஜபக்ஷ அரசின் கொடுமைகளை உலக நாடுகள் புரிந்து கொள்ள தொடங்கி இருப்பதற்கான அடையாளம் என்றுள்ளது. (செ-11)

## சிறீதரன்...

தொடர்பிலேயே மேலதிக விசாரணைக்கு சிறீதரன் அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக நாளை விசாரணைக்கு சமுகமளிக்ககோரும் அழைப்பாணைக் கடிதம் சிங்கள மொழி மூலமே தமக்கு அனுப்பப்பட்டிருந்தாக சிறீதரன் தெரிவித்தார்.

எனினும் அன்றைய தினம் அரசின் நில ஆக்கிரமிப்பிற்கு எதிராக நடத்தப்படவுள்ள கண்டன உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதாகவும் அத்துடன் சிங்களத்தில் எழுதப்பட்ட அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் தம்மால் முழுமையாக வாசித்து அறிய முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து தனித் தமிழ் மூலம் எழுதப்பட்ட அழைப்பாணை அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (செ-11)


**BEACON**
வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்
**புவியியல்**
S.M. ஜின்சியா B.A.Geo Spl
A/L 2013, A/L 2014
'புள்ளிவிபர படவரை கலையியல்'
ஆரம்பம்: 16.02.2013 (Sat 9.00Am)
Sat, Sun 9.00-10.00 Am
பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன
(1736)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புக்கள் மிகவிரைவில்.. T.P.021 222 8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)
(1704)

**மணல் விற்பனைக்குண்டு**
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 21,000/-
தொடர்புகளுக்கு
தீபன்
0722694462
(1716)


## வடக்கு மக்க...

செய்தோம். இதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்தக் கட்டிடத் தொகுதியில் நவீன வசதிகளைக் கொண்ட ஆய்வுகூடங்கள் மருத்துவ உபகரணங்கள் சத்திரசிச்சை வசதிகள் எல்லாம் இங்கே உள்ளன.

முப்பது வருட காலம் சேதம் செய்யப்பட்ட எல்லாவற்றையும் நாம் இப்போது மீண்டும் புனரமைத்து வருகிறோம்.

நீங்கள் எல்லோரும் இதை பாதுகாக்க வேண்டும். தவறான வழிபோக வேண்டாம். வீட்டுவசதி, பாதை வசதி, மின்சார வசதி, கல்வி, சுகாதார வசதி எல்லாம் செய்துள்ளோம். இன்னும் இன்னும் வசதிகளை நாம் வழங்குவோம்.

வடக்கின் வசந்தம் மூலம் இந்த பிரதேசம் மேலும் மேலும் முன்னேறும்; இது நிச்சயம்.

அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரிவேலைகளைக் கூட, இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம். எதிர்க் கட்சி என்னசொன்னாலும் நான் உங்கள் தேவைகளை மறக்கவில்லை. ஒரு நாளும் உங்களை நான் மறக்கமாட்டேன். நாம் எல்லோரும் இந்த நாட்டின் மக்களே! இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் சமவுரிமையோடும், கௌரவத்துடனும் வாழவேண்டும். அதுதான் எனது நோக்கம். அதுதான் எனது தேவை. உங்கள் எல்லோருக்கும் வளமான எதிர்காலம் உருவாகட்டும். நன்றி வணக்கம் என தனது உரையை முடித்துக் கொண்டார்.

இதேவேளை சிங்களத்தில் உரையாற்றும் போது, யுத்தத்திற்கு பின்பு வடபகுதியில் ஜப்பான் அரசாங்கம் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி பணிகளுக்கும் இந்த வைத்தியசாலை கட்டிடத் தொகுதி அமைத்துக் கொடுத்தற்கும் இந்தப் பகுதி மக்கள் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும்,

இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவுதான் சேவை செய்தாலும் அதிலுள்ள குறைபாடுகளையே எதிர்க் கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர். அது மனிதனின் இயல்பு அதற்காக நாம்மக்களின்சேவையைபுறக்கணிக்கமுடியாது. பலபிரச்சினைகள்உள்ளது என்பதை அறிவேன் ஆனால் குறை கூற வேண்டும் என்பதற்காக கூறுகின்றனர்.

ஒருதிணைக்களத்தில் பணிப்பாளர் இல்லாது பிரதிப் பணிப்பாளர் ஒருவர் கடமையில்ஈடுபட்டால் ஏன் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை எனக் கேட்கின்றனர் பணிப்பாளர் இல்லாவிட்டால் பிரதிப் பணிப்பாளர் உள்ளார் என்பதை உணர்ந்து கொள்கின்றனர் இல்லை. இருப்பினும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து வருகின்றோம்.

இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவோ சேவைகளைச்செய்த போதும் சுதந்திரமான வாழ்வினை பெற்றுக் கொடுத்ததையே பெரிய சேவையாக நான் கருதுகின்றேன். எனவே அந்த சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என அவர்மேலும் தெரிவித்தார். (செ-4-6)

# சு.கட்சி அலுவலகத்திற்கு கோத்தபாய திடீர் விஜயம்



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளருடன் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவும் கட்சி அலுவலகத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அங்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜனுடன் கலந்துரையாடினார். மேலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற புலம்பெயர்ந்தவர் உட்பட பலர் கட்சி அலுவலகத்தில் பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்துள்ளனர்.

பின்னர் பாதுகாப்புச் செயலாளர் கடந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுடனும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## இலங்கையின் மனித...

நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு சிரியா பொறுப்புக் கூற வேண்டும் என்றும், அதிகரித்து செல்லும் அந்த நாட்டு அவலங்கள் பேரவையின் நிகழ்ச்சிநிரல் திட்டத்தில் உச்ச நிலையில் இருக்க வேண்டும் எனக் கூறியுள்ள அவர்கள், இலங்கை, பெலாரஸ், மாலி, பாறெயின், கொங்கோ, எரித்திரியா, சூடான், வடஆபிரிக்கா, ரஷ்யா, மத்திய ஆசியநாடுகள் சிலவற்றின் மனித உரிமை மீறல்கள் கூர்மையாக கவனிக்கப்பட வேண்டும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமை கோரிக்கை என்று லூசின்டா கிறிடன் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய விவகாரங்கள் குறித்து இடம்பெற்றிருந்த ஒன்றிய நாடுகளின் கூட்டத்திலேயே, அயர்லாந்து அரசாங்கத்தின் ஐரோப்பிய ஒன்றிய விவகாரங்களுக்கான அமைச்சர் லூசின்டா கிறிடன் இவ் விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பொதுநலவாய...

படி நாம் உங்களை கேட்டுக்கொள்கின்றோம் என இக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அக்கடிதத்திலே மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சட்டவிரோதமான குற்றப்பிரேரணை செயன்முறை இலங்கையில் மனித உரிமைகளுக்கான மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றுக்கான கௌரவம் மோசமடைந்து வருவதை கோடிட்டுக் காட்டியுள்ளது. இந்த போக்கை பொறுப்பில்லாத அதிகாரம் என்னும் எமது அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது.

இப்போதைய சூழலில் பொதுநலவாய அதிகாரம் என்னும் எமது அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது.

இப்போதைய சூழலில் பொதுநலவாய அரசியல் தலைவர்கள் மாநாட்டை நடத்த இலங்கையை அனுமதிப்பது சட்டத்துறையின் சுயாதீனம், சட்டத்தின் ஆட்சி என்பவை தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் கரிசனை தொடர்பில் கடுமையான கேள்விகளை எழுப்ப வழிவகுக்கும்.

உங்களுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்றபடின் எம்முடன் தொடர்பு கொள்ள தயவு செய்து தயங்க வேண்டாம் என்றும் இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஜப்பான் தூது...

செயற்பாடுகளுக்கான கட்டிடத் தொகுதித் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ஜப்பான் நாட்டின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது உரையினை ஆங்கிலத்தில் ஆரம்பித்த தூதுவர் ஹோபோ உரை நிறைவு பெறுவதற்கு முன்பாக சிறிது நேரம் தமிழ் மொழியிலும் உரையாற்றினார்.

தமிழில் உரையாற்றும்போது, எல்லோருக்கும் வணக்கம்! ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் இன்றியமையாத ஆதரவை வழங்கும்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி நோக்கிய இலங்கை அரசாங்கத்தின் கொள்கைக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் தொடர்ந்து உதவிகள் வழங்கும் நன்றி என தனது உரையினை முடித்துக் கொண்டார்.

இதன்போது நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் கைதட்டி வரவேற்றனர். (செ-4,6)

## பல்கலை...

வர்களும் நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் கார்த்திகை 27-ம் திகதி இடம்பெற்ற சம்பவத்தினை அடுத்து கைது செய்யப்பட்ட மாணவர்களில் இருவரான பி.பரமானந்த், எஸ்.ஜெனமேஜெயந் ஆகியோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த ஜனாதிபதி யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது இரு மாணவர்களும் விடுதலை செய்யப்படுவர் என உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் வவுனியா பூந்தோட்டம் சென்ற யாழ். பல்கலைக்கழக சமூகம் விடுதலை செய்யப்பட்ட மாணவர்களை யாழ்.அழைத்து வந்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளது என துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார். (செ-4)

## வன்னியில்...

அதிகளவாகக் காணப்படுவதால் பாலி ஆறு பெருக்கெடுத்து ஓடுவதன் காரணமாக ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

இதனால்விவசாயிகள்பெருமளவுநஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-15)


**ஆஸ்திரேலியா விசா ஆலோசனை (தனியாளுக்கு)**
இலகுவாக, சட்டரீதியாக, குறைந்த கட்டணத்தில் செல்லலாம்.
✸ குடும்ப விசா ஆலோசனைகள் மறு அறிவித்தல்வரை வழங்கப்படமாட்டா.
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(அ-2421)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.